தமிழ் நிலம்

உலகத் தமிழின முன்னேற்றக் கழக வெளியீடு

சிறப்பாசிரியர்

பாவலரேறு பெருஞ்சித்திரனார்

கிழமை இதழ்

தொகுதி 2 | திபி. 2015 | ஆடவை 17 (1-7-84) | 65 காசுகள் | இதழ் எண்: 40 | பகுதி- 27-28

பஞ்சாப் சிக்கலைத் துருப்புச் சீட்டாக-பகடைக் காயாகப் பயன்படுத்தப் பார்க்கிறார் இந்திராகாந்தி!

இந்தியாவின் ஒற்றுமை, தேசிய இனங்களின் உரிமையில்தான் ஏற்பட முடியும்.

இந்திராவின் விருப்பம் இந்தியாவின் கொள்கையாகமுடியாது.

அரசின் அனைத்துக் கருவிகளையும் தன் அரசியல் நிலைப்பாட்டுக்கெனவும், தன்னலத்துக்காகவுமே பயன்படுத்துகிறார் இந்திரா.

வறுமை ஒழிப்பு, சாதி ஒழிப்பு, பொருளியல் சுரண்டல்கள் ஒழிப்பு-முதலிய அனைத்து முயற்சிகளையும் தேசிய ஒருமைப்பாடு என்னும் பொய் மாயையில் மூடி மறைப்பதா?

நிலைமை இப்படியே போனால் இந்தியா சுக்குநூறாகும்!

தேசிய இனங்களின் விடுதலையை எவராலும் தடுத்து நிறுத்த முடியாது!

பாவலரேறு அவர்களின் வெள்ளை அறிக்கை!

இந்திராகாந்தி எவருக்கும் கட்டுப்படாத ஒரு முழு வல்லாண்மை அதிகாரிபோல் செயல்பட்டு வருவது, இந்தியாவை ஒற்றுமைப்படுத்தும் அவரின் நோக்கத்துக்கு நேர்மாறான விளைவை உண்டாக்கக் கூடியது. எதற்கெடுத்தாலும் அடக்குமுறைப் பாணியைக் கையாளும் அவரின் ஆட்சி உத்தி பாராட்டக் கூடியதன்று. குமுகாய அறிவியல் சிந்தனையற்ற அவரின் வெறி ஆளுமைப் போக்கு மிகவும் கண்டிக்கத் தக்கது. படைத்துறையை அவர் மனவிருப்பத்திற்குகந்தவாறு பயன்படுத்துவது, அவரின் அரசியல் முன்னறிவைக் காட்டாது. நாட்டில் பல்வேறு சீர்திருத்தம் மண்டிக்கிடக்கின்றபொழுது, அவரின் அரசியல் கையாளுமையால், மேலும் மேலும் வறுமையும், குமுகாயக் கொடுமைகளும் சட்டப் புறம்பான செயல்களுமே தீவிரமடைகின்றன.

தேசிய இனங்களின் எழுச்சியைக் குமுகாயக் குற்றமாக மதித்து அதை அழித்து ஒழித்துவிட நினைக்கும் அவரின் தன்னதிகார வெறிப் போக்கால் நாடே சிதைந்து சீர்குலையப்போகிறது. ஆட்சிப் பகிர்வால் ஏற்பட விருக்கும் ஆக்கநிலைகளை அவர் சிந்திக்க மறுக்கிறார். ஏறத்தாழ ஐம்பது கோடி ஏழை மக்களைத் தேசிய ஒருமைப்பாடு, என்னும் கற்பனைப் படுகுழியில் இறக்கிப் பட்டினி போட்டுக் கொல்லப் பார்க்கிறார் இந்திரா. இதற்கு, பஞ்சாப் சிக்கலைப் பகடைக் காயாகவும் துருப்புச் சீட்டாகவும் பயன் படுத்தப் பார்க்கிறார். இந்தியாவின் ஒற்றுமையே தேசிய இனங்களின் உரிமையின் அடிப்படையில்தான் ஏற்படமுடியும் என்பதை அவர் ஒத்துக் கொள்ள மறுக்கிறார். அவரின் தனிப்பட்ட விருப்பத்தையே இந்தியாவின் உள்நாட்டு, அயல் நாட்டுக் கொள்கையாக ஆக்கி விடப் பார்க்கிறார்.

மக்களைச் சார்ந்துதான் ஓர் ஆட்சி இயங்க முடியுமே தவிர, ஆட்சியைச் சார்ந்து மக்களை இயக்கிவிட முடியாது என்னும் அரசியல் அடிப்படைப் பாடத்தையே இந்திரா கற்றுக் கொள்ளவில்லை என்று தெரிகிறது. புராண இதிகாச காலங்களைப் போல, அரசியல், அறிவியல், மக்கள் உரிமையியல் வளர்ச்சிபெற்ற இக்காலத்தையும் கருதிக்கொண்டு அரசின் அனைத்துக் கருவிகளையும் உறுப்புகளையும் தம் அரசியல் நிலைப்பாட்டுக்காகவும், கட்சி வலிவிற்காகவும் தன்னலத்துக்காகவுமே பயன்படுத்தி வருகிறார், இந்திரா.

வறுமைஒழிப்பு சாதி.ஒழிப்பு, பொருளியல் சுரண்டல்கள் ஒழிப்பு முதலிய அனைத்துக் கோட்பாடுகளையும், முயற்சிகளையும், இந்திய தேசிய ஒருமைப்பாடு என்னும் எப்

(தொடர்ச்சி 3-ஆம் பக்கம்)

மொழி, குமுகாயம், அரசியல், பொருளியல், கலை,. அறிவியல், பண்பாடு ஆகிய ஏழு துறைகளிலும் உலகத் தமிழினத்தை மேம்பாடுறச் செய்யும் ஓர் உண்மை உழைப்பியக்கம், உ. த. மு. க.

மதுரை மாவட்டம் அணைப்பட்டியில் நடந்த உலகத் தமிழின முன்னேற்றக் கழகக் கொள்கை உரவோர் முதல் பயிற்சி வகுப்புத் தொடர்

நிகழ்ச்சிச் சுருக்கம்

(நம் சிறப்புச் செய்தியாளர்)

நம் கழக முதல்வர் பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள் கடந்த பிப்ரவரி மாதம் நெல்லை மாவட்டச் சுற்றுச் செலவை மேற்கொண்டபொழுது, கன்னெறுப்பு என்னும் சிற்றூரில், நெடுநாளைய தென்மொழி அன்பரும், உரத்த கொள்கையாளரும் ஆகிய திரு. கல்வி. அருட்செல்வன் அவர்கள் இல்லத்தில், கழக அமைப்புகளையும் செயற்பாடுகளையும் ஆய்ந்து வலுப்படுத்தும் நோக்கத்தில் இருநாள்கள் தங்கியிருந்தார். அதுபொழுது, உ.த.மு.க. துணைப் பொதுச் செயலர் திரு. தென்னவன்கோ, திரு. தென்மொழி நா. இளமாறன் திரு. நடவை-தமிழ் வேந்தன் ஆகியோரும் முதல்வருடன் தங்கியிருந்து, அக் கருத்தாடலில் பங்கு கொண்டனர்.

அக்கால், கழக நிலைகளைப் பற்றியும், இன்றுள்ள தமிழின முன்னேற்றச் சூழல்கள் பற்றியும் விரிவாக ஆய்வு செய்தபின்னர், கழகச் செயற்பாடுகளுக்குரிய இரண்டு கருத்துகள் பற்றி மிகுவாகச் சிந்திக்கப்பெற்றது. அவற்றுள் ஒன்று, கழக அலுவலகமும், கூட்ட நிகழ்ச்சிகளுக்கென ஓர் அரங்கமும், வந்து போக கழக உறுப்பினர்கள் புழக்கத்துக்கென ஒரு தங்கு பகுதியும், கழக முதல்வர் தங்கிக்கொள்ள ஒரு வீடும் இணைக்க ஒரு கட்டடமும், கழக முதல்வர் சுற்றுச் செலவுக்கென ஒரு ஊர்தியும் (VAN), 'தமிழ்நிலம்' வெளியீட்டுக்கெனக் கழகச் சார்பில் விரிவான ஓர் அச்சகமும், ஆகிய அனைத்துக்கும் தேவையான பொருள் திரட்டும் வகையிலான 'புக்கொடைத் திட்டம்' என்னும்பெயரில் ஒரு திட்டத்தை விரைவில் அறிமுகப்படுத்தி அவற்றுக்குரிய பொருள் தண்டுவது பற்றியது.

இரண்டாவது, கழக உறுப்பினர்கள், அமைப்பாளர்கள் ஆகியோர், அறிவுநிலையிலும், வரலாற்று விளக்கநிலையிலும், உணர்வுநிலையிலும், கழகச் செயற்பாட்டு நிலையிலும், பொதுமக்களுடன் ஆன ஈடுபாட்டு நிலையிலும் எனப் பல்வேறு வகையாக வளர்த்தெடுக்கப்பட வேண்டியவர்களாக உள்ளதால் அவர்களுக்கென சில பயிற்சி வகுப்புகளை நடத்த வேண்டியிருப்பது பற்றியும், அவற்றுள் ஒன்றை மே திங்கள் இறுதியில் நடத்திவிடுவது பற்றியும் திட்டமிட்டது ஆகும்.

பயிற்சி வகுப்புத் தொடர்பாகப் பேசி முடிவெடுக்கப்பட்டவுடன் பயிற்சி பெற வரும் மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் பிறருக்கும் உணவு தருவது ஒரு சிக்கலாக இருந்தது. இருப்பினும் உணவு தருவது மிகவும் இன்றியமையாதது என்று முடிவெடுக்கப் பெற்றதால், அதன் தொடர்பாக உள்ள பொருள் சுமை, கழகம் இப்பொழுதுள்ள நிலையில் தாங்குதற்கரியது என்று தெரிந்தது. ஏறத்தாழ ஆறாயிரம் உருபா செலவாகும் என்று கணிக்கப்பெற்றது! இந்தத் தொகைக்கு எங்கே போவது.

எப்பொழுதுமே கழகப் பணிகளில் தம்மை முன்னிறுத்திக் கொள்ளும் தீவிரத் தென்மொழி அன்பரும், அருளாளரும் ஆன தென்மொழி நா. இளமாறன் அவர்கள் உடனே பயிற்சி வகுப்புக்கென உருபா ஆயிரம் அன்பளிப்புத்தர ஒப்புக் கொண்டார். தலைமைக் கழகச் சார்பில் உருபா ஆயிரம் ஒதுக்க முதல்வர் பாவலரேறு அவர்கள் ஒப்புக் கொண்டார். மீதித் தொகையை எவ்வாறேனும் பொதுமக்களிடம் தண்டுவது என்று தீர்மானிக்கப்பட்டது.

இந்த முடிவுடன் அடுத்த நிகழ்ச்சிக்கென, பாவலரேறு நிலக்கோட்டை செல்லவேண்டியிருந்தது. நிலக்கோட்டையில் மேனிலைப் பள்ளி இலக்கிய மன்ற விழாவில் பாவலரேறு கலந்து கொள்ள வேண்டியிருந்தது. அங்கிருந்த நீண்ட நாளையத் தென்மொழி அன்பரும், தீவிர திராவிடர் கழகப்பற்றுளரும், ஆசிரியரும் ஆகிய திரு. த. வையை நம்பி என்பவர் அந் நிகழ்ச்சியை ஏற்பாடு செய்திருந்தார்.

எனவே, அந்த நிகழ்ச்சிக்கென, துணைப் பொதுச்செயலர் திரு. தென்னவன்கோ, திரு தென்மொழி நா. இளமாறன், ஆகியோருடன் பாவலரேறு அவர்கள் புறப்பட்டார். அங்கு திரு. த. வையை நம்பி, நிலக்கோட்டை மேனிலைப் பள்ளித் தமிழாசிரியர், பிற இணையாசிரியர்கள் ஆகியோர் பாவலரேறு அவர்களையும் பிறரையும் வரவேற்றுப் பள்ளிக்கு அழைத்துச் சென்று நிகழ்ச்சியை இனிது முடித்துக் கொடுத்தனர்.

இடையில், அவ்வூர் முன்னாள் தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர், நூலகர், ஆசிரியர்கள் சிலர் முதலானோர் பாவலரேறு அவர்களைப் பெருந்துப்பணித்துறைத் தங்குமனையில் வந்து பார்த்துப் பயிற்சி வகுப்பு பற்றி அறிந்து பயிற்சி வகுப்பை நிலக்கோட்டைக்கு அருகில் உள்ள அணைப்பட்டியில் வைத்துக் கொள்ளலாம் என்றும், உணவுத் தொடர்பான சிக்கலுக்குத் தங்கள் பெரும் துணைநிற்பதாகவும் உறுதி கூறினர். ஆனால் ஏனோ தெரியவில்லை அவ்வுதவி இறுதிவரை கிடைக்காமலே போய்விட்டது. ஆனாலும் எவ்வாறேனும் அன்பர்கள் துணையுடன் அவ்வகுப்புத் தொடரை முன்குறிப்பிட்டவாறு அணைப்பட்டியிலேயே நடத்திட்டத் தீர்மானிக்கப் பெற்றது.

எனவே, அது தொடர்பான பற்பல வகையான முயற்சிகள் செய்யப்பெற்றன. நிகழ்ச்சிக்கெனவும் கழகத்திற்கென நிலையாகவும் ஒலிபெருக்கிக் கருவிகள் சொந்தமாகவே வாங்கப் பெற்றதிலிருந்து, இடம் அமர்த்துதல், உணவு ஏற்பாடு செய்தல் முதலிய வற்றை இரண்டு மூன்று முறைகள் நிலக்கோட்டை சென்று தங்கியிருந்து முதல்வர் அவர்களும் அமைப்பாளர் அவர்களும் பாடாற்ற வேண்டியிருந்தது.

இறுதியாக மே மாதம் 21-ஆம் பக்கல் நடைபெறவிருந்த பயிற்சி வகுப்புக்கு முன்னதாகவே, அஃதாவது 17-ஆம் பக்கலே சென்னையிலிருந்து புதுவை மாநில உ.த.மு.க அமைப்பாளரும் சொல்லாய்வறிஞருமாகிய திரு. ப. அருளி அவர்களை அழைத்துக் கொண்டு முதல்வர் நிலக்கோட்டை போய்ச் சேர்ந்தார்கள். அதுபோது துணைச்செயலரும் அமைப்பாளர் நா. இளமாறனும் வந்து முதல்வருடன் கலந்து கொண்டனர். அனைவரும் சேர்ந்து உணவு ஏற்பாடுகள், தங்குதல் ஏற்பாடுகள், விளம்பரங்கள் முதலிய வினைகளை முன்கூட்டியே திட்டமிட்டு ஏற்பாடு செய்தனர். இவ்வகையில் திரு. த. வையைநம்பி பெரிதும் துணை நின்றதைக் கழகம் என்றும் நன்றியுடன் நினைவில் வைத்திருக்கும். அதற்காக அவரை எவ்வளவு பாராட்டினாலும் தகும். இவ்வகையில் துணைநின்ற அணைப்பட்டி அன்பர்கள் சிலரும் பாராட்டுக்குரியவர்களே.

ஒருவழியாக அணைப்பட்டி பயிற்சி வகுப்புநாள் வந்தது. அந்நாளுக்கு முன்னாள் இரவே அன்பர்கள் பலரும் அணைப்பட்டிக்கு வரத் தொடங்கினர். வந்த அன்பர்களை அன்றைய இரவில் திரு இராசாங்கம் வீட்டில் தங்கவைத்து மறுநாள் காலை அணைப்பட்டிக்கு அனுப்பிவைத்தார்கள் முதல்வரும் வரவேற்பாளர்களும்.

மறுநாள் (21-5-84) முதல், மிக அரும்பாடுபட்டு அமைத்த பயிற்சி வகுப்பு மகிழ்ச்சியுடன் தொடங்கியது. அது தொடர்ந்து பத்துநாட்களும் நடந்த விளக்கத்தையும், பயிற்றாசிரியர்கள் எடுத்த பாடத் தலைப்புகளையும், இவ்வகையில் தோன்றாத் துணையாக நின்ற தமிழுள்ளங்களையும் இனி வரிசையாகச் செய்தி வழியாகக் காணலாம்.

மிகுந்த பொருட்செலவிற்கும், வினையழுத்தப் பணிகளுக்கும் பிறகு, முதல் நாள் வகுப்பு ஒருவாறு காலை 9.00 மணி அளவிற்கு ஆய்வாளர் மாளிகையின் நிழல் படிந்த முன்னிடப் பரப்பில் தொடங்கப் பெற்றது. அதற்கு முன்பாகவே நிலக்கோட்டையிலிருந்து வாங்கி வந்திருந்த மின்கலம் சரியானதாக இல்லாமையால் ஒலிபெருக்கி சரிவர இயங்காமல் போனது. ஆகையால் அன்றைய காலை நிகழ்ச்சி முழுக்க ஒலிபெருக்கி இல்லாமலேயே நடத்த வேண்டியதாகப் போய்விட்டது.

நிகழ்ச்சி சரியாக 9 மணிக்குத் திருவாட்டி செந்தாழை ஆறிறைவன் அவர்களால் தமிழ் வாழ்த்துப் பாடப்பெற்று தொடங்கப் பெற்றது. கழக முதல்வர் ஐயா அவர்கள் அனைத்து உரவோர்களையும் அகம் குளிர வரவேற்றுத் தொடர்ந்து பத்துநாள்களும் எவ்வகையில் வகுப்பு நடைபெறும் எனச் சுருக்கமாகக் கூறிவிட்டு அன்றைய வகுப்பிற்குப் பல்லடம் திரு. முத்துக்குமரன் அவர்களைத் தலைமை தாங்கி நடத்திக் கொடுக்கக் கூறினார்கள். ஐயா அவர்களின் உரையை அடுத்து உ.த.மு.க. துணைப் பொதுச் செயலாளர் திரு. தென்னவன்கோ அவர்கள் பயிற்சி வகுப்பு நடத்த இதுவரை ஏற்பட்ட இடர்ப்பாடுகளை விளக்கி, அனைத்து நிலைகளையும் தாங்கிக் கொண்டு நடத்தப் பெறுகிற இப்பயிற்சி வகுப்பு சிறப்புறப் பெற வேண்டும் என அனைவர்க்கும் இடை வேண்டுவதாகவும், அனைவரையும் மனமகிழ்ந்து தாம் வரவேற்பதாகவும் கூறித் தம் வரவேற்புரையைச் சுருக்கமாக முடித்துக் கொண்டார். அதன் பிறகு தலைவர் பல்லடம் முத்துக்குமரனார் அவர்கள் தம் முன்னுரையைச் சுருக்கமாகக் கூறினார்கள்; பணிசெய்ய முன்வர வேண்டும் எனும் கருத்துப் பொதியப் பேசினார். பின்பு புலவர் பொதிகைச் செல்வனார் அவர்களைப் "பாவேந்தர் பாடல்கள்" எனும் தலைப்பின் கீழ் வகுப்பு எடுக்க வரவேற்றார்கள்.

பாவேந்தர் பாரதிதாசனார் அவர்கள் புலமை நலத்தை வெகுவாகத் திறம்பட எடுத்தியம்பிய திரு. பொதிகைச் செல்வனார் திரு. அ.ச. ஞானசம்பந்தனார் தம் ஆய்வு நூலான சில இடங்களில் பாவேந்தரின் பெருமை சேர்த்து எழுதிய இடங்களைக் கண்டித்து ஏறத்தாழ ஒரு மணிநேரம் நிறைவான முறையில் வகுப்பை நடத்தி முடித்தார்கள்.

வெறுமனே இலக்கிய நயங்களை மட்டும் பேசிக் கொண்டிருப்பது பயனற்றது என்றும்

> "இன்னலிலே, தமிழ் நாட்டினிலே உள்ள
> என்தமிழ்மக்கள் துயின்றிருந்தார்!
> அன்னதோர் காட்சி இரக்கமுண்டாக்கி
> என் ஆவியுள் வந்து கலந்ததுவே"

— எனும் பாவேந்தரின் அரும் பாடலை எடுத்தியம்பி தலைவர் முடிவுரை கூறிய பின்னர் வகுப்பு 12-30 மணி அளவிற்கு முடிவுற்றது.

இடைநேரத்தில் மின்கலத்தி வாங்கி வரப்பெற்று மின இணைப்பு வழியே ஒலிபெருக்கி இயங்கியது. கொள்கைப் பாடல்கள் அனைவரையும் ஆடங்கொள்ளச் செய்யத்தக்க வகையில் பட்டி முழுவதும் பரவி ஒலித்தது.

பிற்பகல் வகுப்பு அன்று மாலை 4.00 மணிக்குத் தொடங்கப் பெற்றது. பிற்பகல் நிகழ்ச்சிக்கு உரத் தமிழ்த் தொண்டர் திரு. வியனரசு அனைவரையும் வரவேற்று, புலவர் அதியமான் அவர்களின் வில்லிசைத் திறம் பற்றியும், பழந்தமிழிசை அழிவு பற்றியும் கூறி வரவேற்புரையாற்றினார். திரு. முத்துக்குமரனாரே தலைவராக அமர்ந்திருக்க "பழந் தமிழ் நாட்டுச் சிற்றூர்ப்புறக் கலைகள்" எனும் தலைப்பின் கீழ், பாவலரேறு-ஐயா அவர்களின் 'ஐயை' வில்லிசைக் குழு ஆசிரியர் புலவர் அதியமான் அவர்கள் ஏறத்தாழ முக்கால் மணி நேரம் வகுப்பு எடுத்தார்கள். நாட்டுப்புறக்கலைகள் என்பன எவை என்றும், அவற்றைத் தனித்தனியே திறம்பட விளக்கியும் அவர் வகுப்பு நிறைவுற அமையப் பெற்றது. அவரைத் தொடர்ந்து சொல்லாய்வறிஞரும் புதுவை மாநில உ.த.மு.க. அமைப்பாளரும் ஆகிய திரு. ப. அருளி அவர்கள் சமம், சேலை எனும் இரு பெரும அரிய தமிழ்ச் சொற்களுக்கு மூலம் காட்டி அதன் படிநிலை வளர்ச்சி நிலைகளை எடுத்து இயம்புகையில் உண்மையிலேயே தமிழின இழிவைக் கண்டு கண்ணீர் விடும் நிலை போல் வானம் பொழிய வதைப்பு, பொறியாளர் தங்கு மனையுள் தொடர்ந்து நடத்தப் பெற்றது. ஏறத்தாழ மூன்று மணி நேரத்திற்குள் தமது முந்நூறு மணி நேர உழைப்புப் பிழிவையும் மாத்திரையென அளித்துவிட்ட அவர் திறம் வியக்க வல்லதே.

அவர்தம் உரைப் பொழிவிற்குப் பின்னர் கழக முதல்வர் ஐயா அவர்கள் நம் இயக்கத்தினர் அறிவைப் பெற்று முன்னுக்குச் சென்று சோம்பி விடுகிற சில பல உண்மைகளை எடுத்துக் கூறிவிட்டு நம்மவர் இன்னும் செயலிலே ஈடுபடாமல் வாழ்ந்து கொண்டிருக்கிற இழிநிலைகளைக் கண்டித்துப் ஏறத்தாழ ஒரு மணி நேரம் ஆழமான நம் தொண்டர்களின் செயற்பாடுகள் குறித்து விளக்கினார்கள். முதல்வர் அவர்களின் கருத்துகளை ஒட்டியும் வெட்டியும் அன்பர்கள் மா.செ. தமிழ்மணி, புலவர் தமிழ்மாறன், குழந்தை ஈகவரசன், இளமாறன் ஆகியோர் கலந்துரையாடலில் கருத்துகள் தெரிவித்தனர். தொண்டர்களின் கலந்துரையாடல் இரவு உணவிற்கு முன்னும், பின்னுமாக நடைபெற அன்றைய முழு நாள் வகுப்பும் ஒருவாறு செவ்வனே முடிவுற்றது.

(தொடர்ச்சி 7-ஆம் பக்கம் பார்க்க)

மன்றிருந்த தமிழெங்கே? அதுபோ மாயின்

ஓய்ந்திடல் இல்லை, என் உள்ளமும்
உணர்வும் உயிர்ச்செறிவும்!
தேய்ந்திடல் இல்லை, என் விரல்களும்
தாளும்! திரிந்தலைந்து
சாய்ந்திடல் இல்லை, என் உடலும்;
எனவே சலிப்பிலனாய்
மாய்ந்திடல் வரையும உழைப்பேன்,
உரைப்பேன், மக்களுக்கே!

தமிழ் நிலம்

உலகத் தமிழின முன்னேற்றக் கழக வெளியீடு

சிறப்பாசிரியர்

பாவலரேறு பெருஞ்சித்திரனார்

தொகுதி-2 இதழ் எண் : 40 (1-7-84) பகுதி 27-28

ஒவ்வொன்றுக்கும் என்று எத்தனைக் காலம் போராடுவது ?

தமிழர்களுக்கென்று எத்தனையோ உரிமைகள் மீட்கப்படுதல் வேண்டும். மொழியியல், இனவியல், அரசியல், பொருளியல் எனும் முறைகளில் எண்ணற்ற உரிமைகளை இழந்துள்ளோம் நாம்.

தமிழ்நாட்டில் தமிழ் ஆட்சிமொழி என்பது வெறும் பெயரளவிலேயே உள்ளது. மற்றபடி, அன்றாடப் புழக்க அரசியலில் ஆங்கிலமும், இந்தியுமே ஆட்சி செய்கின்றன. தமிழே புழங்காத துறைகள் பல உள்ளன. ஆனால் ஆங்கிலம் புழங்காத துறை என்று ஒன்றையுமே காட்டமுடியாது. தமிழ்நாட்டு அமைச்சர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் எனப்படுவோர்களுக்குத் தமிழில் பேச முடியுமோ இல்லையோ, ஆங்கிலத்தில் தப்புந்தவறுமாகவாவது அவர்கள் பேசத்தயங்குவதே இல்லை. இதைவிட வெட்கக்கேடு வேறு ஏதாவது உண்டா? இந்தியாவில் வேறு மாநிலங்களில் தங்கள் தாய்மொழியில் பேசாத அமைச்சர்களையாகிலும் சட்டமன்ற உறுப்பினர்களையாகிலும் பார்க்க முடியுமா? வேறு எங்கும் தொலைவில் போகவேண்டாம். மலையாளம் பேசாத மலையாள அமைச்சரையோ, கன்னடம் பேசாத கன்னட அமைச்சரையோ, தெலுங்கு பேசாத ஆந்திர அமைச்சரையோ காட்ட முடியாது. தமிழ் ஆட்சிமொழி இந்த அழகில்தான் இங்குச் செயல்படுகிறது! அதுவும் இந்தி மொழிக்குத் தரப்படும் உரிமையில், சலுகையில் பத்தில் ஒரு பங்கும் மாநில மொழிகளுக்குத் தரப்படுவதில்லை. எத்தனையோ இந்தியெதிர்ப்புப் போராட்டங்களை நாம் நடத்திவிட்டோம். அடிக்க அடிக்க எகிறும் பந்துபோல் இந்தி மேலே மேலே ஏறி மிதிக்கிறதே தவிர, கீழே இறங்கவில்லை. நாளுக்கு நாள் வானொலியிலும் தொலைக்காட்சியிலும் அரசு அலுவலகங்களிலும் இந்தி தூளிபடுகிறது? நம் நாட்டுக் கட்சித் தலைவர்களுக்கோ இந்தியெதிர்ப்பு ஒரு வாழ்நாள் போராட்டமாகவே நீடிக்க வேண்டும் என்பதே உள்நோக்கம். இல்லையானால், இந்தியெதிர்ப்புக்குரல் அவ்வப்பொழுது ஓங்குவதும பின் குறைவதுமாகவே காலங்காலமாய்த் தொடர்ந்து வருமா? இதுபற்றி எவ்வளவோ உண்மைகளை - எத்தனையோ இந்தியெதிர்ப்பு மாநாடுகளில் வெளிப்படையாக நாம் சொல்லிப் பார்த்து விட்டோம். தீர்மானங்களுடன் நம் மனமும் பையும் நிறைந்து விடுகின்றன. அதன்பின். அடுத்த ஒரு கவர்ச்சியான போராட்டத்திற்குத் தாவிவிடுகிறோம்.

எந்த உணர்வில் மக்கள் எழுச்சி கொள்கிறார்களோ, அந்தப் போராட்டத்திற்கு நாம் அணியமாகிவிடுகிறோம். உடனே பேரணி, மாநாடு, எழுச்சிநடை, சுவரொட்டிகள், கவர்ச்சியான முழக்கங்கள் இவையெல்லாம் நமக்கு வாடிக்கையாகவும் வழக்கமாகவும் போய்விட்டன. இதில் யாரைக் குறை சொல்லுவது? யாரை நம்புவது? என்றே நமக்குத் தடுமாற்றம் வந்துவிட்டது.

இந்தியெதிர்ப்பு, பண்டல் குழு அறிக்கை, கோயில் வழிபாடு, கருவறை நுழைவு, தமிழீழக் கோரிக்கை, நுழைவுத் தேர்வு என்றெல்லாம் போராட்ட அறிவிப்புகள் வெளிவந்து கொண்டே இருக்கின்றன. ஒருகாலத்தில் சாதியொழிப்பு மாநாடுகள் நடத்திய கட்சிக்காரர்கள்தாம் இன்று சாதி மாநாடுகளை ஊருக்கு ஊர் நடத்திவருகின்றனர்; அல்லது அவ்வாறு நடப்பதை ஊக்கி வருகின்றனர்! அன்றாடம் மக்கள் நினைவில் நிற்பதற்காக நம்மவர்களின் விளம்பர அணுகுமுறைகளுக்காகவும், ஒவ்வொரு கட்சித் தலைவர்க்கும் ஒவ்வொரு நோபல் பரிசே கொடுக்கலாம்!

முப்பத்தைந்தாண்டு இந்தியெதிர்ப்பால் இந்திமொழியானது, டி.டி.டி. மருந்தடிப்பால் கொசு வலுப்பெற்று வருவதைப்போல வலுப்பெற்று வருகிறது. சாதியொழிப்பு மாநாடுகளால் சாதிகள் வளர்ந்து வலிமை பெற்றுள்ளன. மண்டல் குழு எதிர்ப்பால் மண்டைகள்தாம் வீங்கினவே தவிர. தில்லியரசு அசையவே இல்லை. தமிழ் வழிபாடு அறிவிப்போடு சரி. கருவறை நுழைவுப் போராட்டம் தீர்மானத்தோடு மறந்து போய் விட்டது. மநு எரிப்புப் போராட்டம் வழக்குகளுடன் ஒத்தி வைப்பு வாங்கிக் கொண்டது. தமிழீழப் போராட்டம் 'தமிழகமே படையெடுத்து வரும்' எனும் எழுச்சி முழக்கத்துடன், வெறும் வாயொலியாகவே நலிந்து வருகிறது.

தமிழர்களையும் தமிழர் தலைவர்களையும் இந்தியரசு நன்றாகவே புரிந்து வைத்திருக்கிறது. பஞ்சாப் போராட்டத்தை ஆதரித்து ஓங்கிக்குரல் கொடுக்கவே நமக்கெல்லாம் அச்சம் மிசாக் கொடுமைகள் இன்னும் நெஞ்சத்துடிப்புடன் ஒலித்துக் கொண்டே உள்ளன.

இந்நிலைமையில் நாம் என்ன செய்வது? பணமுள்ளவர்கள் பதுங்குகிறார்கள்; படையுள்ளவர்கள் நடுங்குகிறார்கள்! நம்மிடத்திலோ இரண்டுமில்லை. வெறும் கத்துக் கத்த வேண்டியிருக்கிறது. இருப்பினும் கத்துகிறோம்! விளைவுக்குக் காத்திருக்கின்றோம். ஆடு, அறுக்கிறவனையே நம்பும் என்பார்கள். அறுவடை செய்பவர்களையே நம் தமிழ் மக்கள் நம்புகிறார்கள்! என்ன செய்வது? முரண்பாடான காலம். முட்டி மோதிக் கொள்ளும் கருத்துப் போராட்டங்களிலேயே தமிழினம் கரைந்து வருகிறது.

நமக்கு வேண்டிய உரிமைகள் நமக்கு விளங்குவதில்லை. விளங்கினாலும் வெளிப்படுத்த யாரும் அணியமாக இல்லை; வெளிப்படுத்தினாலும் போராட யாரும் முன்வருவதில்லை; போராடினாலும் நம்மை வீழ்த்துவதற்கு நம்மவர்களே மறைந்து நிற்கிறார்கள். இந்த நிலையில், ஒவ்வொன்றுக்காகவும் உரிமைப் போராட்டங்கள் அறிவிக்கப் பெறுகின்றன. அறிவிப்போடு நல்ல விளம்பரங்களும் விளைவுகளும் மலிவுப் பதிப்புகள் ஆகி விடுகின்றன. வாழ்க்கை நன்றாக நடந்து வருகிறது! வரவு மேல் வரவு! வட்டிக்கு மேல் வட்டி! வளத்துக்கு மேல் வளம்! இத்தனை போதாவா, தமிழின முன்னேற்றத்துக்கு!

இவற்றுக்கிடையில் 'தமிழ்நாடு' தனிநாடாக வேண்டும் என்று நாம் எத்தனைதான் கத்தினாலும் எவர் காதுகளில் விழப் போகிறது? ஒரு வேளை மக்கள் காதுகளுக்கு அவை எட்டுகின்ற வேளையில் தட்டிப் பறிக்கத்தான் தானைத் தலைவர்களும் தளபதிகளும் காத்துக் கொண்டிருக்கிறார்களே! இருப்பினும் அவர்களுக்காக நாம் காத்துக் கொண்டிருக்க முடியுமா? ஒவ்வோர் உரிமைக்கும் ஒவ்வொரு போராட்டமாக அவர்கள் நடத்திக் கொண்டு வரட்டும்! நாம் ஒட்டு மொத்தமான ஒரு போராட்டத்திற்கு அணி வகுப்போம்! அதுதான் தமிழ்நாட்டைத் தனிநாடாக்கும் போராட்டம்! அது நடைபெறாத வரை நம் தமிழினம் உருப்படப் போவதில்லை. எனவே அப்போராட்டத்தை நடத்தி நாம் உருப்படாமல் போவதைப் பற்றியும் நமக்குக் கவலையில்லை! சிந்திப்பவர்கள் சிந்திக்கட்டும்; செயலுக்கு வருபவர்கள் வரட்டும்! போராடித்தான் பார்ப்போமே! என்றைக்காவது ஒருநாள் விடியாதா?

நான் தலைவனல்லன்; முதல் தொண்டன்!

அன்பிற்கும், மதிப்பிற்குமுரிய பாவலரேறு ஐயா அவர்களுக்கு,

வணக்கம், நலமே விரும்புகின்றேன்.

21-5-84 முதல் - 31-5-84 வரை தங்களின் அன்புரைகளும், அறி(ற)வுரைகளும் எங்கள் செவிகளில் என்றென்றும் ஓயா ஒலி தருவன. ஒவ்வொரு செய்கைக்கும் தங்களுடைய விளக்கம் எங்களைத் தெளிவடையச் செய்தது. தங்களிடம் நெருங்கிக் கேட்டுப் பெற்றாலொழிய அன்பின் பெருமையையும் அறிவின் பயனையும் அறிந்து கொள்ள இயலாது.

வந்திருந்த உரவோர்கள் அனைவரையும் உறவோர்களாகக் கொண்டு உள அன்போடு தாயாக, தந்தையாக இருந்து அணைத்துச்சென்றபோல் தங்களைப் போன்ற வேறு எந்தத் தலைவரிடமும் பார்த்தோ கேட்டோ அறிந்திலன்.

"நான் தலைவனல்லன்; உங்களுக்கெல்லாம் முன்னே நிற்கின்ற முதற் தொண்டன். அதனாலே முதல்வன்" என்ற தங்களின் கூற்று என்றென்றும் நினைவிற்கொள்ளத் தக்கது.

'ஐயா நெருப்பு, அவரிடம் அண்டி யாருமே நீண்ட நாள் இருக்க முடியாது. அதனால்தான் பலர் விலகிப் போயினர்.' என்று சொன்னவர்கள், அன்பு ஊற்றால் பெருக்கெடுக்கும் பாங்கினைப் பயின்றும் உணர இயலாதவர்கள்.

பயிற்சி வகுப்பு கொள்கை உரத்தை - உள்ள உறவை வலுப்படுத்தியது, எதிர்கால வரலாற்றில் அணைப்பட்டிக்கோர் அழியா இடம் உண்டு என்பதை உரவோர்கள் அனைவரும் உணர்ந்தே இருக்கிறார்கள்.

இப்போதைய சூழலிலேயே, உறுப்பினர் சேர்ப்புப் பணிகள் தொய்வின்றித் — தொடங்கப் பெறுவது நலமென அவாவுறுகிறோம். - தமிழ்வாணி,

திருவள்ளுவர் சிலைதிறப்பு விழா

நாள் : திபி. உ௦கரு கடகம் உஎ, உஅ. காரி ஞாயிறு (11-8-84, 12-8-84)

இடம் : நெல்லை மாவட்டம் ஏரல்

தலைவர் : பர். க. ப அறவாணன் அவர்கள், சென்னை

திறப்பாளர் : பாவலரேறு பெருஞ்சித்திரனார் சென்னை.

தமிழூர் அருளி

திருவாட்டி தாமரை பெருஞ்சித்திரனார்,

கலைநிகழ்ச்சிகள் :

(1) இருவில்லிசைப்பாடல்கள்
(2) இரு நாடகங்கள்.

(முதல் பக்கத் தொடர்ச்சி)

பொழுதுமே மெய்யாக முடியாத பொய் மாயைப் புனைசுருட்டுப் போலிக் கொள்கையுள் மூடி மறைத்துவிட அவர் முயற்சி செய்வது, விரிசல் விட்டு விழுந்து விடப்போகும் சுவருக்கு வெள்ளையடிக்க முற்படுவதைப் போன்றது. கொள்ளைக்காரர்கள் மக்களைச் சுரண்டி ஏப்பமிடத் துடிக்கும் அரசியல் ஊதியக்காரர்கள், முழுத் தந்நலக்காரர்கள், சில இந்தி வெறியர்கள் முதலியவர்களுக்காக, முழு இந்தியாவையும் சீர்குலைத்துவிடும் முயற்சியில் ஈடுபட்டிருக்கிறார். அவர் நிலைமை இப்படியே போனால், இந்தியா சுக்கு நூறாகச் சிதைந்து போகும் என்பதை ஏனோ அவர் உணர்ந்து கொள்ள மறுப்பதாகத் தெரிகிறது.

இந்திரா இல்லை, வேறு எவர் முனைந்தாலும் இந்தியாவில் தேசிய இனங்களின் விடுதலைப் போராட்ட உணர்ச்சியை, மெய்ம்மத்தை ஒடுக்கி விடமுடியாது, அவை உரிமை பெறுவதைத் தடுத்து நிறுத்தி விட முடியாது என்பதை இந்திராகாந்தியும், அவரைக் கண்கண்ட கடவுளாக மக்களுக்குக் காட்டிக் காசு பறிக்கும் அரசியல் கொள்ளைக்காரர்கள் சிலரும் கருத்து நொள்ளையர்கள் பலரும் உணர்ந்துகொள்ள வேண்டுகிறோம்.

பொய்யான கருத்துப் பரப்புதல்களாலும், போலியான நடைமுறைகளாலும் மக்களை என்றுமே ஏமாற்றிவிட முடியும் என்று மனப்பால் குடித்துக் கொண்டிருக்கும் அரசியல் கயவர்களுக்கும், ஆட்சித் திருடர்களுக்கும் நாம் சொல்ல விரும்புவது இதுதான் 'படைத்துறையையும் புதினக் கருவிகளையும் வைத்துக் கொண்டு, மக்களின் உளவுணர்வுகளை என்றுமே சிறைப் படுத்திவிடலாம் என்று கனவு காணாதீர்கள். மக்கள் என்றுமே மெதுவாகச் சிந்திப்பவர்கள்; ஆனால் விரைவாகச் செயல்படுபவர்கள்! அவர்கள் தூங்கலாம்; ஆனால் விழித்துக் கொள்ள நெடுநேரம் ஆகாது.

மக்கள் ஆற்றல் ஓர் எரிமலையைப் போன்றது. அது எப்பொழுது வெடிக்கும் என்று எவருமே கணித்துச் சொல்லி விட முடியாது' இந்தியா முழுமையுமே பஞ்சாபாக மாறும் காலம் மிகத் தொலைவில் இல்லை! மாவீரன் பிந்தரன்வாலேவை வழிபடுகின்ற இளைஞர்கள் பஞ்சாபில் மட்டுமன்று வேறு மாநிலங்களிலும் இலக்கக் கணக்கில் உள்ளனர். அவர்கள் உங்களின் சொல் விளையாட்டு வேடிக்கைகளை உணர்ந்து வருகிறார்கள்! அவர்களின் செயல் விரைவில் எழுச்சி கொள்ளத்தான் போகிறது! எச்சரிக்கை!

மறு நொடியில் நானெங்கே நீதான் எங்கே?

அணைப்பட்டி வந்து பயனடைந்த அன்புத்தமிழ்க் கொள்கை உரவோரின் ஆர்வ மடல்கள்!

0 உ.த.மு.கழகம் வளர்வதை யாராலும் தடுக்கஇயலாது!

நெஞ்சம் நிறைந்த அய்யா அவர்கட்கு,

வணக்கம். அணைப்பட்டியில் நடைபெற்ற உ.த.மு.க. கொள்கை உரவோர் பயிற்சி வகுப்பு வரலாற்றில் இடம் பெறுவதுடன், வரலாற்றில் ஒரு மாற்றத்தையும் ஏற்படுத்தும் வல்லமை மிக்கது என்பது உறுதி. அந்தப் பத்து நாள்கள் வாழ்வில் மறந்திட இயலாத நாள்கள்! முயன்று பல நூல்களைப் பயின்று தெரிந்து கொள்ளும் அறிவை, தெளிவுகளை அங்கே ஆன்றோர்கள் அறிஞர்கள் அளித்தார்கள்! பல்வேறு வகையில் பல துறைகளைப் பற்றி அந்தந்தத் துறைகளில் வல்லவர்கள் பயிற்சி அளித்தது மிகவும் சிறப்பாக வாய்த்தது!

இனம், மொழி, நாடு பற்றித் தாங்கள் ஆற்றிய தெளிவுரைகளும், உடல்நலன் பேணல் குறித்து ஆற்றிய அன்பு உரைகளும், இயக்க, செயல் நிலைகளைப் பற்றிய உணர்வு உரைகளும் எமை நெறிப்படுத்தின.

பெயர்களை மட்டுமே தென்மொழி, தமிழ்நிலம் வழியாக அறிந்துகொண்டு உறவு கொண்டிருந்த உணர்வு மிகுந்த கழகக் குடும்பத்தின் கொள்கை உரவோர்களுடன், பத்து நாள்களும் ஒன்றாக இருந்து உணர்வுகளைக் கலந்து ஒன்றாகவே உண்டு, உடுத்தி, உறைந்து அன்பைப் பரிமாற்றம் செய்துகொள்ளவும் ஒருவருக்கொருவர் நேரடி அறிமுகம் செய்துகொள்ளவும் தாங்கள் ஏற்படுத்தித்தந்த பெரும்வாய்ப்பு! இஃது அரிய வாய்ப்பாக அமைந்தது. சென்னை மாவட்டத்திலிருந்து குமரிமாவட்டம் வரை உள்ள எல்லா மாவட்டத்து உரவோர்களையும் உறவோர்களாக்கி அங்கே அந்தப் பத்துநாள்களும் இணைத்தது!

வீரத்தின் விளை நிலமாய்ப்பாண்டியன் மண்ணில் வையை ஆற்றங்கரையில் செழித்து வளர்ந்த இயற்கைச் சூழ்நிலையில் ஒருநாள் ஒருநாள் தென்னந்தோப்பிலும், ஒருநாள் மாந்தோப்பிலும், மணற்பரப்பிலும் ஒருநாள் அரங்கத்திலும் என மாற்றி மாற்றி வகுப்புகள் நடைபெற்றதும்; அந்த வையை நீரில் நண்பர்களுடன் சேர்ந்து இளங்காலைப் பொழுதுகளில் நீராடியதும்; இரவு நேரங்களில் கலந்துரையாடியதும், இறுதிநாள் பிரியும்போது பெரும் வருத்தத்தைத் தந்தது! அடுத்த ஆண்டு பயிற்சி வகுப்பு மீண்டும் நடைபெறும் எனத் தாங்கள் அறிவித்தபோது ஓராண்டும் உடனே கடந்துவிடாதா என ஏங்கினேன்!

பயிற்சி வகுப்பில் கலந்து கொண்டவர்களில் பெரும்பாலோர் இளைஞர்களாகவே இருந்தது பெரிதும் நம்பிக்கை தருவதாக இருந்தது.

உலகத்தமிழின முன்னேற்றக் கழகம் வளர்ந்து வருவதை யாராலும் தடைசெய்ய இயலாது!

எதிர்காலம் விடியட்டும்!
மலரட்டும் தமிழ்நாடு!

0 முதல்வர் துணைவியாரே! உங்கள் துணை மதிக்கத் தக்கது!

நெஞ்சம் நிறைந்த அம்மா அவர்கட்கு, வணக்கம்.

ஒரு மாந்தன் சிறப்புடன் வாழவும், அன்றி இழிந்து வீழவும் அவனுடைய வாழ்க்கைத்துணை நலம் பெற்றதாய் அமைவதைப் பொறுத்ததுதான் என்று சொல்வார்கள்!

ஓர் அறிஞர் நிலையில் அவர் சிறந்து முன்னிற்க அவர்தம் துணை எங்ஙனம் அமைந்திருக்க வேண்டும்?

அந்த நிலையில் பாவலரேறு அய்யா அவர்களின் புகழ் வாழ்வில், அறிவு வாழ்வில், உயர்வாழ்வில் தாங்கள் எத்தகைய துணையாற்றி இருந்தால், அவரின் பணிகள் தடையின்றித் தொடர்ந்திருக்கும் என்று எண்ணிப் பார்க்கையில் வியப்படைகின்றேன்!

ஓர் அறிஞரின் அருகில் அவரின் அறிவு நெருப்பாய்க் கொளுத்தும் போது அதனை ஈடுகொடுத்து இணைந்து வாழ்ந்து வரலாறு படைப்பது ஒரு மிகப் பெரிய செயல்விளைவு! அந்தச் செயல்விளைவைத் தாங்கள் செய்திருக்கின்றீர்கள்! இந்தத் தமிழ்மொழி, தமிழ்இனம், தமிழ்நாடு வாழச் சிந்திக்கும் காவலரைக் காத்த உங்களுக்கும் வரலாற்றில் ஓர் இடம் உண்டு! பொழிலுக்கு மட்டும் தாங்கள் தாய் இல்லை; உலகத் தமிழின முன்னேற்றக் கழகத்தில் தம்மை இணைத்துக் கொண்டு பணியாற்றும் என்போலும் இளைஞர்களுக்கும் தாங்கள் தாயாக இருக்கின்றீர்கள்! எதிர்வரும் காலங்களிலும் அய்யா அவர்களின் வாழ்வுக்குத் துணை விளக்காய் இருந்து ஈகம் செய்ய அணியமாய் உள்ள உங்களை மதித்து வணங்குகிறேன்!

வள்ளுவம் காட்டிய தந்தையும் மகனும்!

நெஞ்சம் நிறைந்த தமிழ்த்திரு பொழிலன் அவர்கட்கு, வணக்கம்.

அணைப்பட்டிப் பயிற்சி வகுப்பில் உங்களின் செயல் ஆற்றலைக் கண்டு மகிழ்ந்தேன். இளமைக்கே உரிய சுறுசுறுப்புடனும், அறிவுக்கூர்மையுடனும் தாங்கள் அங்கு ஆற்றிய பணிகள் சிறப்புடையன. உணவு வழங்குவதிலிருந்து, ஒலி பெருக்கியைச் சரி செய்வதுவரை மாணவர்கள் ஆசிரியர்களை அன்புடன் வரவேற்று அமைவு செய்வதிலிருந்து, வழியனுப்பும் வரை. கனிவாகவும், இனிமையாகவும் அணுகிப் பேசிய தன்மைகளைக் கண்டு வியந்தேன்! உவந்தேன்!

அவையத்து முந்தி இருப்பச் செய்யும் தந்தை மகற் காற்றும் உதவியை அய்யா அவர்கள் செய்து விட்டார்கள்! மிகச் சரியாகச் செய்துவிட்டார்கள்.

இவன் தந்தை என்நோற்றான் கொல் எனும் சொல்லை ஈட்டித் தருவது தங்களின் பொறுப்பாகும்! அந்தப் பொறுப்பைச் சிறப்பாய்ச் செயலாக்க வேண்டும்! தாங்கள் செயலாக்குவீர்கள் என நம்புகின்றேன்! அதற்குரிய கூர்மையும் திண்மையும் தங்களிடம் வளர்க்கப்பெற்றிருப்பதை உணர்ந்தேன்! இன, மொழி, நாடு மீட்பு பெற அய்யா அவர்களின் வழியில் தொடர்ந்து தொய்வின்றித் தொண்டாற்றுவோம்!

— என்றும் உங்கள் அன்புள்ள,

ஒடவை. ந.தமிழ்வேந்தன், ஒட்டன் சத்திரம்

0 பயிற்சி வகுப்பால் புதிய எழுச்சி, தெம்பு!

பெருமதிப்பிற்குரிய பாவலரேறு ஐயா அவர்களுக்கு, வணக்கங்கள். கடந்த 21.5.84 ஆம் பக்கல் தொடங்கி 30 ஆம் பக்கல் முடிய, அணைப்பட்டியில் நடந்த நம் உ.த.மு.க. கொள்கை உரவோர் பயிற்சி வகுப்பில் கலந்து கொண்ட அனைவரும் அதனைப் பெறற்கரும் பேறாகவே கருதுவர். தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களின்றும் வந்திருந்த கழகத் தோழர்களுடன் - கொள்கை உரவோர்களுடன் பத்து நாள்கள் தங்கிப் பயின்றது குடும்பத்தாரோடு, உற்றார் உறவினரோடு வாழ்வது போன்ற உணர்வையே ஏற்படுத்தியது அந்தக் கொள்கை உரவோரோடு கொடிய வெஞ்சிறையில் இருந்தாலும் அது தண்ணரும் பூஞ்சோலையாகவே எனக்கிருக்கும்!

பயிற்றுவித்த ஆசிரியப் பெருமக்கள்தாம் எத்துணை அரிய கருத்துகளை எங்கள் எரிபசி உள்ளங்களுக்கு ஈந்தனர்! சற்றும் எதிர்பாராமல் கிடைத்ததாயினும், மார்க்சிய - இலெனினியப் போரியக்க தலைவர் புலவர் திரு. கலிய பெருமாள் அவர்களின் கருத்துரைகள் பாற்சோறுதான்! அனைத்திற்கும் மேலாகத் தங்கள் உரைமணிகள் ஒவ்வொன்றும் எங்களுக்கு ஊட்ட உணவுதான்! அரைத்த மாவையே அரைத்துக் கொண்டிருக்கும் தமிழகத் தலைவர்களுள் தாங்கள் மட்டுமே நெறிவிலக்கானவர் என்பதற்குத் தங்கள் அணைப்பட்டி உரைகளே சான்று! நான் நினைத்தே பார்க்கவில்லை, எங்கள் உடல் நலத்தையும் பேணக் கற்றுக் கொடுப்பீர்கள் என்று!

இளைஞர்களை உசுப்பி, உணர்வேற்றி அந்த வெப்பத்திலேயே குளிர்காய்ந்த வண்ணம் காலந்தள்ளிக் கொண்டிருக்கும் தமிழகக் கட்சிகளுக்கிடையில். எங்கள் உணர்வுழுத்தங்களை ஒருமுகப்படுத்தி, விடுதலைப் பொங்கலுக்கு உலை ஏற்றியுள்ள ஒரு செயலே, உ.த.மு.க. ஒன்றுதான் உண்மையான இனநலக்கழகம் என்பதற்குச் சான்று!

இந்தப் பயிற்சி வகுப்பால் புதிய எழுச்சியும் தென்புமாய்த் திரும்பியுள்ளோம்! இந்த எழுச்சியும் தென்பும், மொழி, இன நாட்டு விடுதலைக்கு இன்னும் ஆயிரமாயிரம் மறவர்களை உருவாக்கும் என்பது திண்ணம். தங்கள் அன்புத் தொண்டன்,

ப. அறவாழி, போழறப்பட்டி.

0 பார்த்தேன் பேராசானை

வான்தொட்டு நிற்கும் மேற்குத் தொடர்ச்சி மலையின் ஒருகூறு; அதன் அணித்தே வளைந்து நெளிந்து வரும் வையை ஆறு; அவ்வாற்றின் கரையின மதுரை மாநகரின் மேற்கே 30 கல் தொலைவில் அமைந்துள்ள சிற்றூர், வையையின் நீரைத் தடுத்து நிறுத்தி வாய்த்திறக்கும் பயன்படுத்தும் சிற்றணை அமைந்த ஊர் அணைப்பட்டி. அவ்வூரின் கிழக்கில் அமைந்த பொதுப் பணித் துறையின் ஆய்வர் மனை. அம்மனையின் முன்நின்று தொடங்கி வையைவரை செறிந்து நிற்கும் நிழல் மரங்கள். எப்போதும் வெயில் வாரா நிழல் முற்றம்.

கடந்த விடை 8-ஆம் நாள் காலை 9 மணி அளவில் உலகத் தமிழின முன்னேற்றக் கழகத்தின் முதல்வர் தமிழ்ப் பேராசான் பெருஞ்சித்திரனார் பயிற்சிக்கு வருகின்றவர்களை வரவேற்கலானார். அவருடன் அம்மாவும் வந்திருந்தார்கள். தமிழருள்ள அடிமுடி காணத் துடிக்கும் அறிஞர் அருளியாரும் தம் குடும்பத்துடன் நிறைந்திருந்தார். பேராசானின் குடும்பம் முழுமையுமே ஆண்டு ஒளிர்ந்திருந்தது.

தமிழ்நிலத்தின் பல்வேறு மாவட்டங்களில் இருந்து பாடிவீடு வந்தடைந்து, நாள்தோறும் முற்பகலும் பிற்பகலும் பேராசிரியர்களும், திறனாளர்களும் பாடிவீட்டு மறவர்க்குச் சொல்லுரம் ஊட்டினர். மொழியியல், இனவியல் நாட்டியல் தலைப்புகளில் பல்வேறு கோணங்களில் சொற்பெருக்கு நிகழ்த்தப்பெற்றன.

பெரும்பாலான நாள்களில் அறிஞர் அருளியாரின் சொல்லாய்வுக் கட்டுரைகள் படிக்கப்பெற்றன. அந்நிகழ்வு தமிழின் முன்மை, தொன்மை, வன்மை, மென்மை எல்லாவற்றிற்கும் மேலாக மெய்ம்மை இவற்றை விளக்குவனவாய் இருந்தன. இதன்வழி இக்காலத் தமிழர் தம் தாய் மொழிக்கு ஆற்ற வேண்டிய கடமையின் பேரெல்லை தெரிந்தது. அருளியாரின் ஆய்வுகள் உலக அரங்கேறும் அற்றைநாள் ஒன்றே தமிழின் மானம் நிலைப்பட்ட நாள் ஆகும்.

இறுதி இரண்டு நாள்களிலும் மார்க்சிய இலெனினிய போர் இயக்கத் தலைவர் ஈகத்திரு கலியபெருமாள் அவர்கள் நடைமுறை உலகியலுடன் தமிழக நிலையை விளக்கினார்கள். தமிழ்தேசிய இன விடுதலை வரும் வழியை வகுத்து விரித்துரைத்தார்கள்.

மார்க்சிய அறிஞர், தமிழக ஆய்வரண் நிறுவனர் திரு. குணா அவர்களின் வகுப்பு பயனுள்ள ஒரு வழிகாட்டி வகுப்பு. எதிர்காலத் தமிழக விடுதலை, விடுதலையின் பின் தமிழக நிலை இவற்றை ஒரு வரைவு படுத்திக் காட்டி இருந்தது சிறப்பு ஆகும்.

இடையிடையே கலந்துரையாடல் எனும் நிலையில் பேராசான் அவர்கள் பேருரைகள் நிகழ்த்தினார்கள் உளவியல், குமுகவியல், அறிவியல், மெய்ம்மவியல் கருத்துகள் அவரின் உரையில் செறிந்திருந்தன. பேராசானின் இப்பொழிவுகளைக் கேட்க, அவருடன் உறைய வாய்ப்புப் பெற்றவர்களைப் பேறு பெற்றவர்கள் எனலாம்.

பத்து நாள்கள் அவருடன் உறைந்து, அவர் உரைகளைக் கேட்டு, அவரின் செயல்களைக் கவனித்து, அதனால் யாம் பெற்ற முடிவு 'பேராசான் என்பவர் ஒரு மாந்தரா? இல்லை; அவர் ஒரு நிலை; நிலையின் விளக்கம்' என்பதே ஆகும். அவர் மாந்தர்கள் எண்ணிச் செயல் செய்வதுபோல் செய்வது ஒருநாளில் சில மணிநேரங்களே. பிற நேரங்களில் அவர் ஒரு இயற்கைப் பொருள் விளக்கம். காற்று, மழை மலை கதிரொளி உடுக்கள் போல் அவர் ஓர் இயற்கைப் பொருள் விளக்கம்.

அவர் இத் தமிழினத்தை ஈடேற்றி விடுவதன் வழி தம் வரவைப் பதிக்கும் ஒருபொருள். எனவே, உ.த.மு.க.வின் உரவோர்கள் அனைவரும் அவர் கருத்துணர்ந்து அதில் தம்மை ஈடுபடுத்திக்கொள்வது ஒன்றுதான் சரியானவழி. அதனால்தான் இதை எழுதும் உரவேனும்

'இனிநாம் சிந்திக்கக் கூடாது; செயற்பட வேண்டும்' என பயிற்சியின் போது கூறியதாகும்.

ஆக, தமிழின மலர்ச்சி என்பது பேராசானின் மாணவர்களால்தாம் இயலும். ஏன் எனில் அவர் 'தன்'னைத் துறந்த ஒரு மாமாந்தர்.

'என்றும் உங்களுக்குக்காக இருப்பேன், இறப்பேன்' என்ற அவரின் பயிற்சி முடிவு உரையை உன்னிச் செயல்படுவோம்

— மா. செ. தமிழ்மணி, வேட்டாங்குளம்.

(தொடர்ச்சி 5-ஆம் பக்கம் பார்க்க)

வீணர்கள் கேடர்களாக மாறுவார்கள்;

கொள்கை உரவோரின் ஆர்வ மடல்கள் ......

0 உடனடியாக விடுதலைக் கூட்டணி அமையவேண்டும்!

பேரன்பும் பேரறிவும் ஒருங்கே அமையப்பெற்ற பாவலரேறு ஐயா அவர்களே!

பெண்ணாகடத்தில் நடைபெற்ற தேசிய இனங்களின் விடுதலை மாநாட்டில் தாங்கள் உரையாற்றும்போது, தமிழ்நாட்டு விடுதலையை விரும்பும் இயக்கங்கள் யாவும் ஒன்றுசேர்ந்து ஒரு விடுதலைக் கூட்டணியை அமைக்க வேண்டும் என்றும், இந்தியாவில் உள்ள தேசிய இனங்கள் அனைத்திற்கும் பொதுவாக அந்தந்த தேசிய இன விடுதலையை விரும்பும் இயக்கங்களைக் கொண்ட தேசிய இனங்களின் விடுதலைக் கூட்டணி என்றதோர் அனைத்திந்திய அமைப்பையும் விரைவாக நிறுவப்பெறுதல் காட்டாயத் தேவை யென்றும் அதற்கான முயற்சியில் விரைந்து ஈடுபடுதல் வேண்டும் என்றும் வலியுறுத்திக் கூறினீர்கள்.

அணைப்பட்டியில் நடைபெற்ற உ.த.மு.க பயிற்சி வகுப்பில் பேசும்போது அனைத்திந்திய அளவில் தேசிய இனங்களின் விடுதலைக் கூட்டணியை நிறுவப்பெறுதல் வேண்டும் என்ற கருத்திற்குப் பலர் ஆதரவாகப் பேசிய போதிலும், சிலர் இதற்கு மாறாக தமிழ்த் தேசிய இனவிடுதலையை மட்டுமே நாம் நினைக்கவேண்டும், பேசவேண்டும், அதற்கான முயற்சியில் ஈடுபடல் வேண்டும்; அப்படியில்லாது பிற தேசிய இனங்களின் விடுதலைக்கும் நாம் ஆதரவு காட்டுவது, நம்முடைய முயற்சியைப் பின்னுக்குத் தள்ளுவதாகும் என்பன போன்ற கருத்துகளையும் கூறினார்கள். அப்போது நீங்கள் பிற தேசிய இனங்களின் விடுதலையை நாம் ஆதரிப்பதனது நம் மொழி, இன, நாட்டு விடுதலையை முன்னெடுத்துச் செல்வதற்குத் துணையாக, துணை வலிமையாக இருக்கும் என்று பல எடுத்துக்காட்டுகளைக் கூறி விரிவாக விளக்கினீர்கள். அஃது இக்கால் எவ்வளவு தூரம் உண்மையென்பதற்குச் சீக்கியர்களையே சான்றாகக் கொள்ளலாம்.

இப்போது தில்லி வல்லாளுமையின்கீழ் அடிமைப் பட்டுக்கிடக்கும் எந்தத் தேசிய இனமும் (அல்லது எந்த தனி மாநிலமும்) தனியாக விடுதலைக்கு முயற்சி செய்வது என்பது அவ்வளவு எளிதாக வெற்றிபெற முடியாதென்பதற்குப் பஞ்சாப்பையே சான்றாகக் கொள்ளலாம். ஏனென்றால் பல நூற்றாண்டுகளுக்கு முன்னால் இந்தியாவின் மீது படையெடுத்து இந்தியச் செல்வங்களை இசுலாமியர் கொள்ளையடித்தபோது எல்லா இந்தியத் தேசிய இனமும் இசுலாமியருக்கு அஞ்சித் தெற்கு நோக்கி ஓடிவந்த நேரத்தில், அவர்களைக் கண்டு அஞ்சாது எதிர்த்து நின்றவர்கள் சீக்கியர்களே. அதுமட்டுமலாது கடைசி இசுலாமியன் இருக்கும்வரை தாடிமீசை எடுப்பதில்லை என்று அன்று கொண்ட மன உறுதியில் இன்றுவரை மாறாமல் தாடிமீசையுடன் இருப்பவர்களாகவும், இந்தியாவிலேயே போர்க்குணம் மிக்கவர்களாகவும், படைத்துறையில் வேறு எந்த மாநிலத்தவரையும்விட அதிக அளவில் இருப்பவர்களாகவும், இதுவரை தன்மானத்தை இழக்காதவர்களாகவும், இன நாட்டுப்பற்று மிக்கவர்களாகவும், மிகக் கட்டுப்பாடுடைய தற்கொலைப் பட்டாளத்தை விடுதலைப் போர்ப்படையை கட்டமைத்தவர்களாகவும், குழந்தைகள் முதல் முதியவர்கள் வரை ஆண்கள் பெண்கள் உட்பட அனைத்துச் சீக்கிய மக்களும் விடுதலையின் தேவையை முழுவதுமாக உணர்ந்து தனிப்பட்ட விருப்பு வெறுப்புகளை உதறித்தள்ளிக் கட்சிகளை மறந்து விடுதலையொன்றே குறிக்கோளாகக் கொண்டு தில்லி வல்லதிகாரத்துடன் தனியாகப் போராடுகின்றனர்.

சீக்கியர்களுக்கு இவ்வளவு இனக்கமான, ஏந்தான சூழல்கள் இருந்தும் (தனியாகப் போராடுவதினால்) எந்த அளவு விடுதலையை முன்னெடுத்துச் சென்று இருக்கின்றார்கள் என்பது நாம் கருதிப்பார்க்க வேண்டிய ஒன்றாகும்.

பிற தேசிய இனங்களின் கூட்டமைப்பு இல்லாமல் தனியாகப் போராடுகின்ற சீக்கிய மக்களை எல்லா இந்திய மக்களுக்கும் எதிரானவர்கள் என்று அனைவரையும் நம்பவைக்கும் தில்லி வல்லாளுமைப் பேரரசு பட்டாளத்தைக் கொண்டு மிகக் கொடுமையான முறையில் சீக்கிய மக்களை அடக்கி வருவதையும் மொழி இன, நாட்டு விடுதலையை விரும்பும் நம் அனைவரும் கூர்ந்து நோக்க வேண்டிய ஒன்றாகும்.

இந்நிலையில் (தங்கள் கருத்துப்படி) தேசிய இனங்களின் விடுதலைக் கூட்டணி எவ்வளவு முகாமையானது என்பது விளங்கும். அதேபோல் தமிழ்நாட்டில் விடுதலையை விரும்புகின்ற ஓரளவு ஒத்த கருத்துடைய கலியபெருமாள், மார்க்சிய அறிஞர் குணா போன்றவர்களையும் இன்னும் இதுபோன்ற கருத்துடையவர்களையும் ஒன்றிணைப்பது அல்லது ஓரணியில் திரட்டுவது எவ்வளவு முகாமையான, இன்றியமையாத பணி என்பதும் அதேபொழுது இடர்ப்பாடான சிக்கலான பணி என்பதும் அனைவருக்கும் விளங்கும்.

இவ்விரண்டு முகாமையான பணிகளையும் தமிழகத்தில் தாங்கள்தாம் சிறப்பாகச் செய்ய முடியும். எனவே நம் அடையப்போகும் மொழி, இன நாட்டு விடுதலைக்குத் தமிழக விடுதலைக் கூட்டணியும், தேசிய இனங்களின் விடுதலைக் கூட்டணியும் எவ்வளவு இன்றியமையாதது என்பதும் விளங்கும். மேலும் இத்தகைய கூட்டணி மொழி, இன, நாட்டு விடுதலை முயற்சியின் ஓர் அளவு கல்லாக அமையும் என உளமாற நம்பித் தங்கள் முயற்சியினைத் தலை தாழ்ந்து வரவேற்கிறேன்.

- கு. மெய்யறிவுத்திருமேனி (கு.மெஞ்ஞானமூர்த்தி), பலலடம்.

0 உங்களைப் புகழவேண்டிய கட்டாயம் எனக்கில்லை; உண்மை இது!

அருமைப் பேராசான் அவர்கட்கு,

பயிற்சி நாட்கள் பத்தும் பயனுடையவையாகக் கழிந்தன.

மெய்நோவும், பசித்துன்பமும் நோக்காது தாங்கள் ஆற்றிய சொற்பெருக்கு, இன்னமும் எம் செவியில் சுழன்று கொண்டே நிற்கின்றது. 'தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க்கு' மனக்கவலை இருக்காது என்ற மெய்யுரையை உங்களுடன் பழகிய பத்து நாள்களும், எனக்குத் தெள்ளிதின விளக்கின.

காலை 4 மணிக்கே நீங்கள் கண் விழித்து விடுவதைக் கண்ட பிறகு எனக்கு 5 மணி வரை தூங்க மனமில்லை.

இரவு 12 மணிக்கே நீங்கள் படுக்கச் செல்வதைப் பார்த்த பிறகு 10 மணிக்கு நான் படுக்கப் போவது 'பாவமாக'த் தெரிகிறது தமிழர் - தமிழ் நாடு - என்பனவற்றிற்காக எல்லா அரசுப் பணிகளையும் உதறிய உங்களைப் பார்த்த பிறகு,

எனக்கு, என்வயிறும், என்மனைவிமக்களும், பெரிதாகக் கருத உள்ளம் மறுக்கின்றது. 'உண்டால் அம்ம இவ்வுலகம் - என்னும் புறப்பாடல் உங்களைப் பார்த்த பிறகு அது வெறும் கற்பனைப் பாட்டு அன்று என்ற மெய்ம்மை விளங்கிற்று. உங்களைப் புகழ வேண்டிய கட்டாயம் எனக்கில்லை. இந்த உண்மைகளை நினைவு கூர்வதின் மூலம் எனக்கு நானே சுறுசுறுப்பு ஏற்றிக்கொள்ள இவை தேவைப்படுகின்றன. அவ்வளவே!

'தமிழ்நிலம்' - விரிவுபற்றி மீண்டும் மீண்டும் திட்டமிட்டபடி உள்ளோம்.

அன்புஇளவல் அருளியின் அருவிப் பெருக்கு, ஆறாக மாறி தமிழ்நாட்டில் அத்தனை சந்து பொந்துகளிலும் பாய்ந்தாக வேண்டும். அதற்கொரு விரிவான திட்டம் வேவை என்ன செய்யலாம் என்று எங்களுக்குக் கட்டளையிடுங்கள்,

'இலக்கியத் துறையில் தமிழ் வளர்ச்சிக்குரிய ஆக்கப்பணிகள்' என்ற தங்களின் அரிய படைப்பு 'கவிதை எனக்கோர் கைவாள்' என்ற வைரவரிகளைத் தாம் நினைவு படுத்துகின்றது.

குறைந்தது தமிழ்ப் புலவன்மார் ஒவ்வொருவர் கையிலும் இச்சிறு நூல் இருக்குமானால் மொழி' என்பது எவ்வளவு சிறந்த ஒரு படைக்கலன், - என்ற தொடக்கப் பாடத்தையாவது புரிந்தவர் ஆவார்.

"மொழி முக்காலத்தையும் இணைத்து நிற்கும் ஒரு மெய்ப்பாடாகும்"

ஆம். எழுத்துக்கு எழுத்து உண்மை!

என்றும் உங்கள் தொண்டன்
புலவர் தமிழ்மாறன்., புதுப்பட்டி (நெல்லை)

0 கலந்து கொள்ளத் தவறியவர்களுக்குப் பேரிழப்பு!

அன்புள்ள ஐயா,

உ.த.மு.க. சார்பாக நடைபெற்ற பயிற்சி வகுப்பில் கலந்து கொண்டவர்களுள் நானும் ஒருவன். என்னால் பயிற்சி நடைபெற்ற பத்து நாள்களும் கலந்து கொள்ளாதது எனக்கு இழப்பாகத்தான் தோன்றியது. அடுத்த பயிற்சி வகுப்பிற்காவது தவறாமல் முழுவதும் கலந்து கொள்ளவேண்டும் என்று முடிவு செய்துள்ளேன்.

பயிற்சி திறந்த வெளியிலும் குறித்த நேரங்களிலும் நடைபெற்றது என்னைக் கவர்ந்தது. இம்முறை பயிற்சியில் கலந்துகொள்ளத் தவறியவர்கள் கட்டாயம் அடுத்தமுறை நடைபெறும் பயிற்சியில் கலந்து கொள்ள வேண்டும் என்று விரும்புகிறேன்.

தங்கள் அன்புள்ள, தென்மொழி அன்பன்
— உளங்கவரழகன், வட்டச் செயலர், இராசிபுரம்.

உ.த மு.க உறவு மடல்

சிறுபான்மை பெரும்பான்மை நடைமுறையில் ...

மக்களாட்சியில் பெரும்பான்மை முடிவே சரியானது. ஆயின், மக்களாட்சியின் தன்மையின் சிறப்பானபண்பு அது. ஆனால், மக்களாட்சி நடைபெறுகிறதா என்பதே வினாக்குறியாகவுள்ளது. மக்களுக்குள்ள அதிகாரம் 'ஒரு நிமையம்' மட்டுமே... அதுவும் ஐந்தாண்டிற்கு ஒருமுறையே உள்ளதாகும்! இதுவும்கூட உறுதியற்றதாகவே இருக்கின்றது. மக்களின் விருப்பம் என்ற பெயரில், ஒரு சிறிய கும்பலே, இவ்வாளுமை உரிமையைத் தீர்மானிக்கின்றது. இவ்வாறாக, அடிமுதல் நுனிவரை மக்களாட்சிப் பண்பு, பகடிக்குரியதாகவும், பகட்டுத் தன்மையுடையதாகவும் ஆக்கப்பட்டுள்ளது

ஆட்சி ஆளுமை அமைப்பு காரணமாகப் 'பெரும்பான்மை' முடிவுக்கூட 'இடைப்பில்' போய்விடுகின்றது!

'பெரும்பான்மை' என்பது 'எண்ணிக்கை' அடிப்படையில் உள்ளது. சமவாய்ப்புப், சமவுரிமையும் இல்லையெனில் 'பெரும்பான்மை'யால் எதுவும் நிகழப்போவதில்லை. 'அளவுமாற்றம்' வெறும் எண்ணிக்கையில் நிகழ்வதில் பயன் மிகுதியும் ஏற்படாது. ஆயினும், அதனை இயக்கும் ஆற்றல் 'பணத்தின் கையில் உள்ளதை நாம் கணித்தல் வேண்டும்! புரிதல் வேண்டும்!!

எனவே, 'சிறுபான்மை', 'பெரும்பான்மை' என்பது மாயத்தோற்றமாகவே உள்ளது.

'பெரும்பான்மை'யாகக் கருதப்படுகின்ற ஒரு பிரிவினர், ஒரு பகுதியில் சிறுபான்மையாகி விடுகின்றனர். இதனால், உடனடியான 'பயன்' விளைவதில் இடர்ப்படுகின்றது. நாட்டளவில் பெரும்பான்மையாகவுள்ள ஒரு பிரிவினர் நிலை இப்படியாகச் சிறுபான்மையாகவுள்ளவர் பகுதி காரணமாகப் பெரும்பான்மைக்கான அதிகாரத்தோடு விளங்குகின்றனர்!

இந்த நிலைமை ஆய்வினால், 'பெரிய' 'சிறிய' என்ற தோற்றம் மாயை ஆகிப் போவதை உணர முடியும்.

பாரதம்—தமிழ்நாட்டில் 'தமிழர்' நிலைமை:

பாரதத்தில் தமிழர் சிறுபான்மையே; தமிழ்நாட்டில் பெரும்பான்மையே' என்ற போதும் முடிவு பாரதத்தின் கையிலேயே உள்ளது; தமிழ்நாட்டளவிலும் 'தமிழர்' ஒரு செயலை, முடிவுபண்ண முடியவில்லை. காரணம், 'தமிழ்நாடு' பாரதத்திற்குக் கீழ்ப்பட்டதென்பதே. இந்தப் 'பொருத்தம்' அனைத்து மாநிலங்களிலும் காணத்தக்கதாகவே உள்ளது.

சமவாய்ப்புக்காகப் போராடும் வேளையிலேயே, இத்தகைய 'நேர்மை'களுக்காகவும் போராட வேண்டுகிறோம். அப்போதே உண்மையான குமுகாயம் தோன்றுதல் முடியும்! அங்கங்கே தோன்றும் சிக்கல்களைக் களைவதில் மக்களை ஈடுபடுத்தும் நடைமுறையைக் கண்டறிதல் வேண்டும்!

வரலாற்றை எழுதப்புகுபவர் இத்தகைய அரசியல் அதிகாரத்திற்குக் கட்டுப்பட்டு விடுகின்றனர். இதனால் உண்மை இடம் வலமாகத் திரிபுபட்டுப் போகின்றது! உண்மையான தேசிய இன, வரலாற்றுத் தடயங்களைத் தேடியறிய வேண்டிய கட்டாயம் வரலாற்று அறிஞர்களுக்கு உள்ளதாகும்.

வரலாறு என்பது நாள், நடப்பு மட்டுமன்று, அது வருங்கால முறையின் வழி முறையை மாற்ற வல்ல கண்ணோட்டத்தைக் கொடுக்கக் கூடியதாக இருத்தல் வேண்டும். எனவே 'சிறுமை', 'பெருமை' பற்றிய நோக்கில் அவை பற்றிய அகவளர்ச்சியினை அறிதல் வேண்டும்.

வளர்கின்ற புத்தினம் தளிர்களைக் காக்கவும், ஊக்கவும் வேண்டும். ஆம், வளர்கின்ற புதிய தலைமுறையையே வரலாறு காட்டவல்லதாக இருத்தல் வேண்டும்!

— பறம்பை அறிவன்

0 அணைப்பட்டி நிகழ்வு தவக்கல்வி ஆகும்!

அரும்பெருந்தமிழீர்! தங்கள் நோன்றினை வணங்குகின்றோம்!

அணைப்பட்டி நிகழ்வு எம் போன்ற தமிழுணர்வுள்ள இளைஞர்களுக்கு ஒரு பெரும் தவக்கல்வி ஆகும். தாங்கள் மேற்கொண்ட இப்பெரும் ஊழியம் தமிழ் மக்கட்குப் பெரும்பயன் நல்கும்.

புலவர். ச. சிவசங்கு, தலைவர்
கொற்கைத் தமிழ்மன்றம், ஏரல்.

அவர்களை விலக்கி, உங்களை விளக்குங்கள்!

சென்னையில் உலகத் தமிழின முன்னேற்றக் கழகத்தின் முதன்மை அலுவலகத் திறப்பு விழா!

இடப் பொருத்தமும் ஏந்தும் பொருந்திய தகுதியான அலுவலக இடம் கழகம் தொடங்கிய காலத்திலிருந்து வாய்க்காது இருந்தமையால்,-கழகச் செயற்பாடுகள் இதுவரை தட்டுத் தடங்கலோடு நடைபெற்று வந்தது. கடந்த திங்கள் பெரு வெற்றியோடு நடைபெற்ற உ.த.மு.க கொள்கை உரவோர் பயிற்சி வகுப்புத் தொடரினையடுத்துச் செயற்பாடுகள் உரமுறுக்கம் உற்றன.

அதன் முதல் கட்ட முனைப்பில், ஏந்தும் பொருத்தமும் வாய்ந்த வாய்ப்பான இடம் ஒன்று, சென்னை சேப்பாக்கம் வாலசா சாலை 4-ஆம் எண் மனையில் வாய்த்தது. அலுவலக அமைப்பிற்குரிய அத்துணை ஏந்துகளும் பொருந்திய அவ்விடத்தில் உ.த.மு.கழக அலுவலகத் திறப்புவிழா, ஆடவை-1-ஆம் பக்கல் (தி.பி. 2015) (15.6.84) வெள்ளியன்று 7-30 மணியளவில் நிகழ்ந்தது. விரைந்து கழகச் செயற்பாடுகளைத் தொடங்கவேண்டிய சூழலால், ஆரவாரமற்ற எளிய முறையில் அது நிகழ்ந்தேற வேண்டியமைந்தது. கழக முன்னணியினர் அனைவர்க்கும் பெருக்க நிறைவை ஏற்படுத்தும் அருமையான அலுவலக அமைப்பு! சூழலால் தூய அத் தமிழ்நெஞ்சங்கள் அனைவர்க்கும் அழைப்பு விடுத்து நிறைந்து சூழக் கொண்டாடுமாறு இவ்விழா அமைவில்லையே என்ற ஏக்கம் கழக முதல்வர் பாவலரேறு ஐயா அவர்களின் நெஞ்சினும் முகத்தினும் தென்பட்டது.

கழகமுதல்வர், புதுவை மாநில உ.த.மு.க. அமைப்பாளர் வழக்கறிஞர் ப. அருளி, தஞ்சைப் பல்கலைக் கழகக் கலைக் களஞ்சியச் செய்தித் தொகுப்பாசிரியர் திரு மா. பூங்குன்றன், தென்மொழி அலுவலக மேலாண்மையர் திரு. மா பொழிலன், திருவாட்டி தாமரை பெருஞ்சித்திரனார், திருவாட்டி-இறை பொற்கொடியம்மை, திருவாட்டி.தேன்மொழிபருளி, திருவாட்டி.செந்தாழை ஆறிறைவன், திருவாட்டி-கயற்கண்ணிபூங்குன்றன், செல்வி. மா. பிறைநுதல், திருவாட்டி. அகிலேசுவரியம்மை, ஆகியோர் தென்மொழி அலுவலகப் பணிப்பொறுப்பாளர்கள் உடன் விழாத் தொடக்கத்தில் நிரம்பியிருந்தனர்.

அந்த இனிய தொடக்கப் பொழுதில், பெரியார் மாவட்டப் பொழுறப்பட்டி-தூய செந்தமிழ்த் தொண்டரும் ஓவியக் கலைஞருமான திரு. அறவாழி அவர்கள் இடல்பாக வந்து சேர்ந்து கலந்து கொண்டு மகிழ்ந்தார். அந்நேரத்தில் கழகமுதல்வர் ஐயாவைத் தேடிவந்த முரசொலி அடியார் அவர்கள் தென்மொழி அலுவலகத்தில் செய்தியறிந்து, தாமும் விழாவில் கலந்து மகிழ்ந்தார்கள். திரு. அடியார் அவர்களுடன் அவரின் அன்பர் ஒருவரும் கலந்து கொண்டார்.

அதுபோது தென்மொழியின் தொடக்கக் காலந் தொட்டு தோன்றாத் துணையாக மலேசியாவின் ஈப்போவில் இருந்து இயங்கி வரும் பாவலர் குறிஞ்சிக் குமரன் என்னும் சா. சி. சுப்பையா அவர்கள், எதிர்பாரா வகையில் உ.த.மு.க அலுவலகத் திறப்புவிழாவில் வந்து கலந்துகொண்டு கழகமுதல்வர் ஐயா அவர்களிடம் நெஞ்சம் பூரிக்கப் பேசி மகிழ்ந்தார். அவரைச் சார்ந்த இரு நன்னெஞ்சங்களும் உடன் வந்திருந்து விழாவில் கலந்து கொண்டனர். செந்தமிழ்த் தொண்டர் பாவலர் சா. சி. சுப்பையா அவர்கள் தமிழிளைஞர் பல்லோர்க்குத் தமிழறிவுறுத்தும் பணியைச் செய்து வருபவர் என்பதும், தமிழுணர்ச்சி தழைத்தோங்க மலேசியப் பகுதிகளில் பாடுபட்டு வருபவர் என்பதும், ஈப்போவில் இயங்கிவரும் பாவாணர் தமிழ் மன்றத்தின் தலைவர் என்பதும் இங்குக் குறிக்கத் தக்கனவாகும்.

பாவலர். சா. சி. சுப்பையா அவர்களிடம் கழக முதல்வர் ஐயா அவர்கள் திரு. அருளி அவர்களை அறிமுகப்படுத்தி அவரின் தமிழ்மொழிய ராய்ச்சி வன்மையை விளக்கினார்கள். பெரிதும் மகிழ்ந்த திரு.சுப்பையா அவர்கள்,வருமுறையில் பாவலரேறு அவர்கள் சிங்கை மலேசியச் சுற்றுச் செலவு மேற்கொள்கையில், திரு. ப. அருளி அவர்களையும் உடனழைத்து வரவேண்டுமாய் அழைப்பு விடுத்தார்.

விழாவில் கலந்துகொண்ட அனைவர்க்கும் இனிப்பும் தேநீரும் வழங்கப்பட்டன.

ஒரு குரல் ஒலிக்கத் தொடங்கி விட்டது!

— எரிமலை

'கலை' என்னும் பெயராலும் 'கலாசாரம்' என்னும் பெயராலும் இந்தத் தமிழினத்தை அழிப்பதற்குப் பார்ப்பனர்களும் அவர்களைப் போலவே பிழைக்கும் கயமைத் தமிழர்கள் சிலரும் செய்து வரும் அழிம்புகட்கு அளவே இல்லாமல் போய் விட்டது!

'மனியன்' என்றொரு பார்ப்பனர் 'இதயம் பேசுகிறது' என்றொரு ஏட்டினை நடத்துகின்றார். (பார்ப்பனர் என்றும், நடத்துகிறார் என்றும் மதிப்புக் கொடுத்து எழுத வெட்கப்படுகிறேன்) 5-11-1984 பிப்ரவரி இதழில் ஓர் ஆசிரியவுரை அம் மணியனால் 'நலந்தானே' என்னும் தலைப்பிட்டு எழுதப்பட்டுள்ளது. அந்த உரையில் எழுதப்பட்டுள்ள சில சிந்தனைச் சிதறல்களைப் பாருங்கள்!

'இந்தியா ஏழை நாடுதான்.... ரொம்ப ஏழை நாடு. அதில் சந்தேகமில்லை. ஆனால் இரண்டு விசயத்தில் மட்டும் அது ரொம்ப பணக்கார நாடு..' உலகமே நம்மை நாடித்தேடி வந்து பெறும் அளவு செல்வமான நாடு...

அந்த இரண்டு—ஆன்மிகம்! கலாசாரம்.

இந்தப் பாரதம் முழுவதும் ஒவ்வொரு மூலை முடுக்கிலும் காற்றின் சர்வ வியாபகத்தைப்போல் அவை நிறைந்திருக்கின்றன.

இதைத் தரிசித்து, உணர்ந்து 'ஞானபூமி' 'இதயம் பேசுகிறது' இதழ்களில் முடிந்த அளவு-ஆம் எங்கள் சக்திக்கேற்ப முடிந்த அளவு வெளிப்படுத்த உத்தேசித்துள்ளோம்.

'ஞானபூமியில்' ஆன்மிக இந்துமத சிறப்புக்களும் இதயம பேசுகிறது' இதழில்—சாதி, மத பேதமின்றி அனைத்து மக்களின் சமூக வாழ்வு, கலாசாரப் பெருமைகளும் இடம்பெறும்.

முதலில் கன்யாகுமரியிலிருந்து இப் பணி தொடங்குகிறது.

மாலை ஆறுமணிக்குக் கலைவாணர் அரங்கத்தில் மணியனின் புதிய எ.பி. காசெட்டான காரிய சித்தி மந்திரங்கள் வெளியிடப்படும். திரு. தாணுலிங்க நாடாரவர்கள் வெளியிட, முதல் காசெட்டை சுவாமி மதுரானந்தாஜி பெற்றுக்கொள்வார்கள்.

எங்கள் பணி மிகப்பெரிது... உங்கள் ஆதரவே எங்கள் பலம்....

இப்படியாகத் தொடர்ந்து அந்த ஆசிரியவுரை செல்கிறது.

ஏப்ரல் 15-21,1984 இல் வெளிவந்த அதே இதயம் பேசுகிறது இதழில் 'ஒரு இரவு நேர ஒத்திகை' என்றொரு கதை (பக் 18-24) அச்சாகியிருக்கிறது.

அந்தக் கதையில் சில வரிகளைப் பாருங்கள்! ''கனமான கம்பளியை ஒதுக்கித் தள்ளினாள். பட்டு மிருதுவுடன் உறுதியுமான வெள்ளை சால்வையை உரித்தெழுந்து தரையில் இறங்கியபோது-''அந்த சீ-த்ரு' இரவு ஆடை அவளது வளமான மார்பு பிரதேசங்களின் நிற பேதங்களை மறைக்காமல் பிடிவாதமாகப் பார்த்துக் கொள்'' என்றது.

அவளது மிக அந்தரங்கமான உணர்ச்சிப் பகுதியை கறுப்பு உள்ளாடை மறைத்த வைத்திருந்தது (இந்த சிந்தனை வரிகட்கு அப்படியே விளக்கமாக ஒரு பெண்ணின் படம் ஒரு பக்கம் முழுவதும் அடைத்துக் கொண்டுள்ளது)

கழுத்திலிருந்து மார்பில் இரண்டாகப் பிளந்து தொங்கிய நாடாவை உருவியதும் கவுன் சரிந்து காலை சுற்றி வட்டமாகியது. பிறந்த மேனியாக அவசரமின்றி குளியலறைக்குள் போனாள்'

ஆளுயரக் கண்ணாடியில் பார்த்த போது அவள் அழகு அவளுக்கே போதையூட்டியது'

இப்படியாகக் கதை, இல்லை 'கலாசாரம்' தொடர்கிறது.

''இதயம் பேசுகிறது இதழில் சாதி, மத பேதமின்றி அனைத்து மக்களின் சமூக வாழ்வு, கலாசார பெருமைகளும் இடம்பெறும்''. என்ற மணியப் பார்ப்பனர் வி(ள)ளக்கிய கலாசாரப் பெருமையைப் பார்த்தீர்களா!

எத்தனைப் பெரியவர்கள் பிறந்தாலென்ன? எத்தனைக் கோடி சேர்த்து ஒரு கழகத்தை வைத்து விட்டுப் போனால் என்ன? தமிழினத் தானைத் தலைவர்கள், தமிழினத் தளபதிகள், என்று கோடிப் பொருள்கள் குவித்துத் திரியும் தமிழர் தலைவர்கள் வாழ்ந்தால்தான் என்ன? மணியனைப்போல் தமிழர் கலாசாரத்தை, ஐயோ பொறுத்துக் கொள்ளுங்கள் இந்தியர் கலாசாரத்தை எழுதிவிடவா முடியும்!

ஓ! மணியன் அவர்களே! உங்கள் திறமை வாழ்க! உங்கள் வஞ்சகம் வாழ்க! நீங்களென்ன இன்று நேற்று வாழ்ந்தவர்களா! நாலாயிரம் ஆண்டுகளாகவே காட்டியும் கூட்டியும் வாழ்பவர்கள் இல்லையா! உங்களைத் திருத்த, உங்களைக் கவலைப் படவைக்க இந்த நாட்டில் குருதியோட்டம் உடைய தலைவர் ஒருவரும் இல்லை. உண்மைதான்! ஆனால் ஒன்று, ஒரேயடியாக இப்படியே எண்ணியிருந்து விடாதீர்கள்!

''எத்தனை ஆண்டுகள் புரிந்தனை போரே!
இற்றதா ஆரியப் பார்ப்பனர் வேரே"

இன்னுமுன் கட்டாரிக் குண்டடா கூரே!''
என்று ஒரு குரல் ஒலிக்கத் தொடங்கிவிட்டது என்பதையும் கேட்டு வையுங்கள்.

ஓ! மானங்கெட்ட தமிழர்களே! நீங்களாவது சேளுங்கள்!

விழிமின்! எழுமின்!

சென்னைக்குத் தெற்கே ஏறத்தாழ 60 அயிரமாத்திரித் தொலைவில்-மகாபலிபுரத்திற்கு அருகில் தொழிற்நுட்ப வரலாற்றில் சிறப்பிடம் பெறுவது தான் கலபாக்க அனுமின் திட்டம்

1983 ஆம் ஆண்டுசூலை 2ஆம் பக்கல் இயக்கநிலை அடைந்து சூலை 23 ஆம் பக்கல் நமது(!) தலைமை அமைச்சரால் தொடக்கிவைக்கப் பெற்று, 1984 சனவரி 26 ஆம் பக்கலிலிருந்து வணிகமுறையாக மின்விசை அளிக்கத் தொடங்கியது.

42 கோடியே 20 இலக்கம் அளவிகள் (யூனிட்டுகள்) மின்விசை உருவாக்கம் 35 கோடி மக்களின் பயன்பாட்டுக்கனுப்பப்பட்டது.

இதுபற்றிய முழு உரிமையும் மாநில அரசுக்கே உரியது. முன்னம் நடுவண் அரசு இதைப் பறிக்க முயன்றபோது மாநில அரசுகளின் எதிர்ப்பு தடுத்து விட்டது.

ஆனால், இந்த உரிமையிலும் நடுவண் அரசு இப்போது கை வைத்து விட்டது.

கல்பாக்க மின்சாரத்தில் 15 விழுக்காடு மேனிக்கு, புனல் மின்சாரம் மிகுதியாகக் கிடைக்கும் வாய்ப்புள்ள கேரளத்துக்கும், கருநாடகத்துக்கும், இவற்றின் வாய்ப்பின்றி நிலக்கரியைப் புதையலாகப் பெற்றுள்ள ஆந்திரத்திற்கும், நிலையான வைப்பு என்ற வகையில் தில்லிக்கும், மற்றும் புதுவைக்கும் போக 25 விழுக்காடு தமிழகத்திற்கு-அனல், புனல் மின்சார வாய்ப்பற்ற, இயற்கை வஞ்சித்த தமிழ் நிலத்திற்கு 10 விழுக்காடு மட்டுமே அதிகம் என்னும் நிலை ஏற்பட்டுள்ளது.

ஒவ்வோர் உரிமையாக இழந்து வரும் தமிழகத்தின் இழிநிலையைத் தலைவர்களே(!) எண்ணிப்பாருங்கள்! நாளொன்று குறித்து ஓரணி திரண்டு உரிமை மீட்க விழிமின், எழுமின்!

அடிப்படை — 'தினகரன்' 6 6.84.

— தாரை. தமிழ் வென்றி.

உலகத் தமிழின முன்னேற்றக் கழகத்தின் செயற்பாடுகளின் முன்னேற்றங்கட்குரிய அடிமனை அமைந்து விட்டது. செயற்பாடுகளும் முடுக்கங் கொண்டுவிட்டன. ஆங்காங்கு உள்ள கழக நெஞ்சங்கள் புத்தெழுச்சியோடு செயற்பட்டு வினைவளம் விளைக்கவேண்டுமாய்க் கேட்டுக் கொள்ளப் பெறுகின்றார்கள்! சென்னைக்கு வரும் உ.த.மு.க. அன்பர்கள், நாள் வாடகை உரு 5-கொடுத்து விட்டு, மேற்படி அலுவலகத்தில் தங்கிக் கொள்ளவும் வசதிகள் செய்யப் பெற்றுள்ளன என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

அனைத்துக்கும் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

உலகத் தமிழின முன்னேற்றக்கழகம்
4. வாலாசா சாலை, சேப்பாக்கம், சென்னை-5.

"தென்மொழி"

சென்னை-5.

தனித்தமிழில்வெளிவரும் உயர்ந்த இலக்கியஇதழ் ஒவ்வொரு தமிழ்த்திங்களும் முதல் நாளன்று வெளிவரும்.

	உள்நாடு	கொழும்பு	வெளிநாடு
தனியிதழ் :	1.25	3-00	3.00
ஆண்டுக் கட்டணம் :	15 உருபா	40 உருபா	35உருபா
அரையாண்டுக் கட்டணம்:	8 ,,	20 ,,	18 ,,
வாழ்நாள்கட்டணம் :	200 ,,	—	—

ஊர்தோறும் கழகம் அமையுங்கள்!

கொள்கை உரவோர் முதல் பயிற்சி வகுப்புத் தொடர்

நிகழ்ச்சிச் சுருக்கத்தின் தொடர்ச்சி ... ... —

அன்றைய நாள் மூவ்வேளையும் நிலக்கோட்டையினின்று உணவு எடுத்து வரப்பெற்று அருந் தமிழ்த் தொண்டரும், உலகத் தமிழின முன்னேற்றக் கழகத்தின் கொள்கைபரப்புச் செயலருமான திரு. தமிழ்மாறன் அவர்களாலும் அன்பர்கள் சிலராலும் உரவோர்களுக்குப்படைக்கப்பெற்றது குறிப்பிடப்பட வேண்டியது.

நிகழ்ச்சி தொடங்குவது முதற்கொண்டு வகுப்புகள் முடியும் வரை வந்திருந்த நடுவண் அரசின் ஒற்றுத்துறை சார்ந்த ஒற்றர்களும் காவலர்களும் அனைத்துக் குறிப்புகளையும் எடுத்துச் சென்றதும் குறிப்பிடத் தக்கதாகும்.

இரவுப் படுக்கை அணைப்பட்டி பொறியாளர் தங்கு மனையில் கழியவே இரண்டாம் நாள் வகுப்பு (22-5-84) காலையில், முன்னாள் நடைபெற்ற தங்கு மனையையொட்டிய மர நிழலிலேயே நடைபெற்றது.

நாடாப் பதிவான் வழி தமிழ் வாழ்த்து ஒலிபரப்பப்பெற்ற பின், அனைவரும் பேசிப் பழக வேண்டும் அதனால் அனைவர்க்கும் வாய்ப்புக் கொடுக்கும்படி வரவேற்புரை நன்றியுரைகள் இணைக்கப் பெறவேண்டும் என ஐயா கூறியது படி, திரு. ப. துரையரசன் (உ.த.மு.க. அமைப்புச்செயலர்) அவர்கள் அன்றைய காலை வகுப்பிற்குத் தலைவராக அமர்த்தப் பெற்ற பின்னர், திரு. இனநல வேந்தன் (உ.த.மு.க. நெல்லை(தெற்கு) மாவட்டச் செயலர்) அவர்கள் வரவேற்புரையாற்றினர். பிரிக்கப்பெற்ற தமிழகத்தில் தான் பொதுவுடைமை விதைக்கப்படுமே யொழிய, பொதுவுடைமை விதைக்கப்பெற்ற நிலையிலேயே தமிழகம் கிடைக்காது என உணர்வுரையாற்றி அனைவரையும் வரவேற்று அமர்ந்தார்.

தலைவர் திரு. ப துரையரசனார் இக்கால அரசியல் போலிகளை வெகுவாகச்சாடி தம் முன்னுரையை முடித்துவிட்டு 'எதிர்காலத் தமிழகம் - தனித்தமிழ் நாடு', எனுந் தலைப்பின் கீழ் புலவர் திரு தமிழ்மாறன் அவர்களை வகுப்பு எடுக்க அழைத்தார்கள்.

ஏறத்தாழ இரண்டு மணிநேர அளவில் கடந்த கால விடுதலைப் போராட்டங்களையும், விடுதலை தொடர்பாக அறிஞர் பெருமக்கள் பலரின் கருத்துரைகளை இடையிடையே தெளித்தும் அரிய நிலையில் சிறப்புற புலவர் தமிழ்மாறன் அவர்கள் வகுப்பு எடுத்தார்கள்.

'நீ சட்டத்தைத் திருத்தாதே, அதற்காக முயற்சியும் செய்யாதே, மக்களைத் திருத்து, சட்டம் அவர்கள் பின்னால் நொண்டியடித்துக் கொண்டு வரும்''-எனப் பெரியார் கூறியகூற்றையும்,

''அறிவுக் கருவியைத் தூக்கிக் கொள், அது மிகவும் கூர்மையானது; ஐரோப்பிய வைரங்களை விடக் கூர்மையானது'' என சாக்ரடிசு கூறியதையும் போல் பல அறிஞர்களின் கருத்துப் பிழிவையும் கொடுத்தார், பயிற்றுசிரியர் புலவர் தமிழ்மாறன். பின்னர், தலைவர் முடிவுரைக்குப் பின் திரு. பூண்டி மறவன், நன்றியுரை கூற காலை நிகழ்ச்சி முடிவுற்றது.

அன்று பிற்பகல் பயிற்சியாளர்கள் இரு குழுவினராகப் பிரிந்து வத்தலக்குண்டு, நிலக்கோட்டை ஆகிய இரு ஊர்களுக்கும் சென்று. கொள்கை விளக்கத்திற்காகவும் ஊர் பொதுக்கூட்டத்திற்கெனத் தொகை வேண்டும் முகத்தானும் தண்டலில் ஈடுபட்டனர். மாலை 4-00 மணி அளவிற்கு அணைப்பட்டியிலிருந்து திருவாளர்கள் கல்லை - பெருஞ்சித்திரன, கல்லுப்பட்டி,-முத்துக்குமரன்; பல்லடம்; கு. மெய்ஞ்ஞானமூர்த்தி, பல்லடம்; சி. இராமசாமி, பல்லடம்; மு தங்கவேல், பல்லடம்; மு. அறிவுடைநம்பி, பல்லடம்; ஆ. நாகராசன், பல்லடம்; வேலவன், வத்தலக்குண்டு; சீனி. செந்தேவன், பல்லடம்; த. வேலுச்சாமி, பல்லடம்; க. தங்கவேல், பல்லடம்; சு. சுப்பிரமணியன், பல்லடம்; ந. விநாயக மூர்த்தி, பல்லடம்; பரமசிவம், பல்லடம் ஆகிய பதினைந்து பேர்களும் வத்தலக்குண்டுவிற்கும்; திருவாளர்கள் குழந்தை-ஈகவரசன், திருச்சி; புகழேந்தி, கள்ளக்குறிச்சி; கி. பெருமாள், மின்பாறை; தமிழ்வென்றி, தாராபுரம்; வையைநம்பி, நிலக்கோட்டை; ப. அறவாழி, போழறப்பட்டி; பூண்டிமறவன், அமரர்பூண்டி; குமரதன்னொளியன், வேலூர்; மா. செ. தமிழ்மணி, நெமலி; தென்மாறன். நெல்லை; ந. தமிழ்வேந்தன், ஒட்டன்சத்திரம்; துரை — தென்னவன், சென்னை; வியனரசு, சென்னை; இளமுருகன், சென்னை; பொழிலன், சென்னை; நிலக்கோட்டை வட்டத் தி.மு.க. செயலர் ஆகிய பதினாறு பேரும் நிலக்கோட்டைக்கும் சென்று தண்டல் செய்தனர், வத்தலக்குண்டு குழுவினர் வழி உரு 124.00 உம், நிலக்கோட்டைக் குழுவினர் வழி உரு. 213-25 உம் தண்டப்பெற்றன. நிலக்கோட்டைக் குழுவினர் தலைக்கு உரு. 2 மேனி சேர்த்து உ.த.மு.க. கொடி இரண்டு தைத்து ஊர்வலமாகக் கொள்கை முழக்கங்களை இட்டுக் கொண்டும். பாவலரேறு ஐயா அவர்களின் பாடல்களைப் பாடிக் கொண்டும் சென்று தண்டல் செய்த முறை புதுமையானதாகவும், பயனுடையதாகவும் அமைந்தது. நிலக்கோட்டைக் குழுவினர் பதினைவருக்கும் திரு. வையைநம்பி அவர்கள் தம் சார்பில் தேநீர் வாங்கிக் கொடுத்து மகிழ்வித்தது குறிப்பிடத்தக்கது. இரு குழுவினரும் ஏறத்தாழ 10 மணி அளவிற்கு அணைப்பட்டி திரும்பினர்.

மூன்றும் நாள் வகுப்பு ஊருக்கு மேற்கே உள்ள சௌராட்டிரர் சத்திரத்தில் நடத்தப்பெற்றது. வகுப்பிற்குத் தலைவராக தென்மொழி. நா. இளமாறன் அமர்த்தப்பெற்றார். தமிழ் வாழ்த்திற்குப் பின்னர் திருச்சி குழந்தை ஈகவரசன் தம் வரவேற்புரையில் தம்மின் தென்மொழி ஈடுபாட்டை விளக்கிவிட்டு அனைவரையும் வரவேற்று அமர்ந்தார். தலைவர் திரு. நா. இளமாறன் கடந்த காலத் தென்மொழிச் செயல்பாடுகளைக்கூறி அதில் தம் பங்கையும் எடுத்தியம்பிவிட்டு வகுப்பெடுக்க இருந்த புலவர். கடலூர். ப, மணிமாறன் அவர்களை அழைத்துத் தம் முன்னுரையை முடித்துக் கொண்டார்.

'வரலாற்று இலக்கியப' எனும் தலைப்பின் கீழ் வகுப்பெடுக்க வந்த புலவர் மணிமாறன் தம்மின் கடந்தகால வாழ்க்கைச் செயல்பாடுகளைச் சுருங்கக் கூறிவிட்டுப்பின் வரலாறு என்பது பற்றியும் இலக்கியம் என்பது பற்றியும் தனித்தனியே விளக்கிவிட்டு. வரலாற்றிலக்கியங்களால் ஏற்படும் பயன், சிறப்புகளை விரிவாக எடுத்தியம்பி வகுப்பைச் செம்மையுற முடித்தார்கள்.

அவர்தம் பேச்சிற்குப்பின் பத்து நிமைய இடைவெளி விடப்பெற்று பின் புலவர் சிவசங்கு அவர்களால் பொருநராற்றுப்படை இலக்கிய வகுப்பு' எடுக்கப்பெற்றது. இலக்கியம் பயின்ற மாணவர்களுக்குத் தாம் கல்லூரிகளில் அமர்ந்திருப்பது. போன்ற எண்ணம் ஏற்படும் நிலையில் மிகச் செப்பமுற அழகாக தம் முதுமை மழலையோடு இழைத்து வெளிப்படுத்திய அவர் பாங்கு எண்ணி மகிழற்குரியது. புலவர் சிவசங்கு அவர்களின் வகுப்பிற்குப் பின்னர் காலை வகுப்பு முடிவுற்றது.

பகல் உணவிற்குப்பின்னர் பிற்பகல் நிகழ்ச்சி 3 மணிக்குத் தொடங்கப்பெற்றது. 3. 30 வரை திரு. ஈகவரசன் கனிச்சாறு பாடல்களை இசையொடு பாடினார்.

வகுப்பிற்கு அன்றன்றும் சிலர் இணைந்து கொண்டே இருந்ததால் அனைவருக்கும் ஒவ்வொருவரையும் தெரியவேண்டிய கட்டாயத்தால் ஐயா அவர்கள் ஒவ்வொருவரையும் தன்னறிமுகம் செய்யப் பணித்ததின் பேரில் அனைவரும் ஒவ்வொருவராகத் தன்னறிமுகம் செய்தனர். தன்னறிமுகத்தை அடுத்து துவரங்குறிச்சி கண்ணன் நிகழ்ச்சிக்கு வருகை தந்திருந்த அனைவரையும் வரவேற்று நடந்து கொண்டிருக்கும் பயிற்சி வகுப்புகளின் சிறப்பையும் பயனையும் வெகுவாகக்கூறி அமர்ந்தார். அதன் பின்னர் திரு மா. செ. தமிழ்மணி அவர்கள் தலைமை ஏற்கத் 'தற்காலத் தமிழகம்' எனும் தலைப்பின் கீழ் கழகத் துணைப்பொதுச் செயலாளர் திரு. தென்னவன்கோ அரியதொரு வகுப்பை ஏற்று நடத்தினர். தமிழின உணர்வு பரவியிருந்த காலந்தொட்டு இக்கால் மறைந்துவருகின்ற கொடுமையான சூழல் வரை ஒவ்வொன்றாக பல விளக்கங்களுடன் கூறி வந்த அவர், திராவிட இயங்களின் ஓட்டை உடைசல்களையும் தெளிவுறப் பக்கம்பிடித்து காட்டினர். அவரின் ஏறத்தாழ ஒன்றரைமணிநேரப் பொழிவிற்குப் பின்னர் தலைவர் மா. செ. தமிழ்மணி அவர்கள் தம் முடிவுரையில் நாம் அனைவரும் இங்ஙனம் பொருளற்றுக் கூடிப்பிரியும் நாளே நடந்து கொண்டிருந்தால் எங்ஙனம் செயல் செய்வது அனைவரும் செயலில் தீவிரமாக இறங்க வேண்டும் என்றும் ஒவ்வொருவரும் உறுதியாக ஐவரை அனைத்து நிலைகளுக்கும் ஏற்ப அணியப்படுத்தி, உருப்படுத்திக் கொண்டுவந்து இணைந்து செயல் செய்யவேண்டும் என்றும் தாம் அந்நிலைக்கு இன்றே அணியம் என்றும் வீர முழக்கமிட்டு உரை கேட்டுக்கொண்டிருந்த அனைத்து உரவோர் நெஞ்சினையும் நிமிர்த்தினர். திரு. தமிழ்நாடன் நன்றியுரைக்குப்பின் அவ்வகுப்பு முடிவுற்றது. அரைமணிநேர ஓய்வுக்குப் பின்னர் கலந்துரையாடல் நடைபெறும் எனக் கூறப்பெற்று அனைவரும் பொறியாளர் தங்குமனைக்கு அழைக்கப் பெற்றனர்.

ஆறரை மணியளவிற்கு அனைவரும் தங்குமனையை ஒட்டிய மரத்தடியில் வட்டமாக அமர்ந்தனர். கழக முதல்வர் ஐயா அவர்கள் கலந்துரையாடலுக்கு முன்னுரை கொடுக்கிற நிலையில் அரிய பல விளக்கங்களைக் கொடுத்தார்கள் கடந்த வகுப்புகளில் பலரும் பேசிய நிலைகளைக்கொண்டு பார்த்தால் அனைவர் பேசுவதும் சரியே, ஆனால் அவற்றைக் கடைபிடிப்பது, நடைமுறைப் படுத்துவது கடினம். சொல், கருத்து, செயல் இந்நிலைகளுக்குள் எவ்வளவோ வேறுபாடான நிலைகள் நம் தமிழக இயக்கங்களைப் பொறுத்த அளவில் உள்ளன. அந்நிலைகளில் பார்த்தால் தந்தை பெரியார் அவர்கள் இருண்ட காலத்திலிருந்து வைகறையாய் வெளிப்பட்ட சிந்தனையாளர் ஆவார். அவர் செய்த செயலை உலகில் எவரும், திருவள்ளுவர்கூட செய்யவில்லை. அந்நிலையில் திருவள்ளுவர் ஒரு குமுகாய அறிஞர். அஃதாவது Social Scientist ஆனால் தந்தை பெரியார் ஒரு குமுகாய மறுமலர்ச்சியாளர் அஃதாவது Social Reformer. இந்நிலையில் திருவள்ளுவர் கூறிய கருத்துகள் மிகமிக உயர்ந்ததுதாம் ஆனால் அந்த அளவினது தேவையில்லை. சோற்றுக்கே வழியில்லாத காலக்கட்டத்தில் அந்த அளவு அறிவு தேவையே இல்லை, எனவே அனைவரும் பெற்ற அறிவு நிலையை வைத்துக் கொண்டு செயலில் இறங்கவேண்டும். அதுபோழ்து நல்லவனாக, நல்ல தலைவனாக அமர்த்திக் கொண்டு அவன்பின் செல்ல வேண்டும். இக்காலத்தில் தலைவர்களெல்லாம் அச் சொல்லுக்கே பொருளற்றவர்களாகப் போய்விட்டனர், அதனால் தான் நான் முதல்வன், அஃதாவது முதலில் செயலில் கருத்தில், சொல்லில் அனைத்திலும் ஈடுபடுபவன் எனப் பொருள்படப் பொறுப்புப் பெயரை வைத்துக் கொண்டேன், என்றும் கழக உரவோர்கள். தொண்டர்கள் அனைவரும் தங்கள் பேச்சில் பிறர் எவரையும் இழிவாகவோ,பழியாகவோ பேசக்கூடாது மிக ஆய்ந்து பேச வேண்டும் என்றும் ஏறத்தாழ இரண்டு மணிநேர அளவிற்கு அரியதொரு கருத்துப் பெட்டகத்தை வடித்தெடுத்துக் கொடுத்தார்கள் செவியுணவு நிரம்பி வழிந்தபின் அவியுணவு அணியப் படுத்தப் பெற்றுப் படைக்கப் பெற்றது. கழக முதல்வரின் அரிய கருத்துப் பிழிவு நிறைவு கொண்டு செரிக்கப் பெறுமல் உண்டிக்குப்பின் அன்பர்கள் அனைவரும் கூடிக் கலந்து பேசிக்கொண்டும், சிந்தித்துக் கொண்டும் இருந்தனர். அந்த அளவில் மூன்றும் நாள் வகுப்பு முழு மன நிறைவினதாக அமைந்தது.

மறுநாள் நெடுநேரம் இரவைக் கடத்த விரும்பாத பகலவன் அன்று மிகுவிரைவிலேயே பயிற்சி வகுப்பைத் தொடங்க வந்துவிட்டான். வழக்கம் போன்றல்லாமல் மூன்றும்நாள் வகுப்பு அணையைக் கடந்து உள்ள அழகிய மாந்தோப்பு. குளிர்ச்சியை வாரி இறைக்கும் ஆற்றங்கரை இவற்றையொட்டிய மணல்திட்டில் நடைபெற்றது

(தொடர்ச்சி 8-ஆம் பக்கம்)

பண்டாரகர் பட்டத்திற்கென பாவலரேறுவின் பாடல்கள் ஆய்வு!

'பாவலரேறு பெருஞ்சித்திரனார் பாடல்கள் - ஓர் ஆய்வு' - என்னும் தலைப்பில் பண்டாரகர் (Ph. D) பட்டத்திற்காக, அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில், தமிழ்த்துறைத்தலைவர், கலைமாமணி பர். ஆறு. அழகப்பனார் அவர்களின் நெறி காட்டுதலின் கீழ், திரு. சா. உதயசூரியன் க.மு; மெய். மு. அவர்கள், ஓர் ஆய்வை மேற்கொண்டுள்ளார்.

ஏற்கனவே, சென்னை பச்சையப்பன் கல்லூரிப் பேராசிரியர், பர். செயப்பிரகாசு. அவர்களின் நெறி காட்டுதலின் கீழ் திரு. திருவாணன் க.மு. அவர்கள் 'பாவலரேறு பெருஞ்சித்திரனார் பாவியங்கள்' என்ற தலைப்பின் கீழ். ஓர் ஆய்வு மேற்கொண்டு, மெய்.மு. (M Phil.) பட்டம் பெற்றுள்ளார் என்னும் செய்தி அறியற்பாலது.

அத்துடன் பாவலரேறு அவர்களின் 'ஐயை' என்னும் பாவியம், திருச்சி. பாரதிதாசன் பல்கலைக் கழகத்தில், மெய்.மு. பட்டத்திற்கும், சென்னை, தனியார் கல்லூரியான இலயோலா கல்லூரியில், கலை இளைஞர் பட்டத்திற்கும், பாடநூலாக வைக்கப் பெற்றுள்ளது என்னும் செய்தியும் பலருக்கும் தெரிந்ததே.

உ. த. மு. க. வை வலுப்படுத்துங்கள்!

(7-ஆம் பக்கத்தின் தொடர்ச்சி)

நான்காம் நாள் வகுப்பான இன்று நெல்வேலி தென்மொழி சின்னத்துரை அவர்கள் தலைமையேற்க அருந்தமிழ்த் தொண்டர் வியனரசு அவர்களையும் வரவேற்றார். உலகின் பிற உரிமைபெற்ற இயக்கங்களின் விடுதலை வரலாற்றைத் தமிழின விடிவு வரலாற்று முயற்சிகளோடு ஒப்புமைப்படுத்திக் காட்டிச் சுருங்கக்கூறி அனைவரையும் வரவேற்ற அவர் திறம் பாராட்டிற்குரியது. தலைவர் சின்னத்துரை அவர்கள் தம் முன்னுரையில் தமக்கு அதிகமான பேச்சாற்றல் இல்லை என்றுக்கூறித் தம் தொடக்கக்காலத் தென்மொழி ஈடுபாட்டை விளக்கிவிட்டு, அன்று வகுப்பு எடுக்க வந்திருந்த கோவை இரணியன் அவர்களை அழைத்தார்.

'தமிழினத் தாழ்ச்சியும், வீழ்ச்சியும், மீட்சியும்' எனும் அருந் தலைப்பின்கீழ் திரு. இரணியன் தாம் முன்பே அணியப்படுத்தி எடுத்து வந்திருந்த கட்டுரையைப் படித்த முறையில் வகுப்பு எடுத்தார்.

'நமக்கு நாமே நம்மை மிகைப்படுத்திப் புகழ்ந்து கொள்ளும் நிலையில் நம்மிடம் அந்த அளவு உயர்ந்த போங்கு இக்கால் இல்லை. அதை நாம் இழந்து விட்டோம். சாதி அமைப்புகள் பார்ப்பனர்கள் வந்து வலுப்பட்டுப் போயினவே தவிர நம்மிடத்திலும் தொடக்கக் காலத்தில் சாதியம் தாண்டவம் ஆடிக்கொண்டுதான் இருந்தது. நிலையான, சிறப்பான குமுகாயம் இல்லாமல்போக சாதியமும், நிலக் கிழமையும் தாம் மூலகாரணம். எனவே இவை அனைத்திற்கும் ஒரே தீர்வு நாம் இழந்த நம் மண்ணை வாழ்வதற்காக மீண்டும் பெற வேண்டும். அப்படிப் பெறுவதற்கு நமக்குள் நாம் ஏற்படுத்திக் கொள்கிற சில்லறைப் போராட்டங்களை நிறுத்தி விட்டுப் பெருத்த, வலுத்தமான விடுதலைப் போராட்டத்தைத் தொடங்க வேண்டும்.

இந்நிலை உருவாக்கத்தில் நம்பிக்கை இழப்பு போலும் கருத்துப்பரப்பல்கள்—சான்றாக 'தமிழகம் உருப்படியாகாது' என்பது போலும் நிலைகளைத் தவிர்த்துவிடல் வேண்டும்......

.. மொழியை மட்டுமோ, பிற சிக்கலில் ஒன்றை மட்டுமோ முன்னுக்குக் காட்டிப் பெறப்படும் விடுதலை தேவையற்றது. பொருளியல் நிலையிலும் சாதி சமயப்போக்கிலிருந்தும் விடுதலை பெற வேண்டும். அதுவே முழுமையான விடுதலை. அப்படிப்பட்ட நன்னாளுக்காக அனைவரும் ஒன்றிணைந்து போராட வேண்டும்''-என ஏறத்தாழ ஒன்றரை மணிநேர அளவிற்கு மிக ஆழமான கருத்துகளை எடுத்துக்கூறிச் செவ்வனே வகுப்பெடுத்தார்.

அதைத் தொடர்ந்து சாதிப்பாகுபாடு ஆரிய வருகைக்கு முன்னரே இருந்தது எனும் கருத்து சரியானதன்று. திரு. இரணியன் தொல்காப்பியத்திலிருந்து எடுத்துக்காட்டிகள் கூறிய 'சாதி' என்ற சொல் குலம், கூட்டம் எனும் பொருள் படவே குறிக்கப்பெற்றது என்பதற்குத் தொடக்ககால 'குல்' மூல ஒலியினின்று 'சாதி'-வளர்ந்து விட்ட நிலையையும் அதன் பொருள் விளக்கத்தையும் மிகச் சிறந்த முறையில் சொல்லாய்வறிஞர் திரு. ப. அருளி அவர்கள் எடுத்துக் கூறினார். அடுத்து, வகுப்பு தொடர்வதற்குப் பத்து நிமையம் இடைவெளிவிடப் பெற்றது.

அவ்விடை நேரத்தில் இரணியன் கூறிய சில கருத்துகளுடன் உடன்பட இயலாமல் போகவே புலவர் தமிழ்மாறன், திரு. வியனரசு, திரு இனநலவேந்தன் வேறு சில அன்பர்கள் கூடி வட தேசிய இனங்களின் விடுதலைக்காகத் தமிழகச் சிந்தனையாளர்கள் சிலர் தம் அறிவை, செயலை வீணடிக்க வேண்டியுள்ளது. அவர்கள் தமிழகத்திலேயே முழு உழைப்பையும் தரலமே என்றும், வாழ்வதற்காகவே விடுதலை வேண்டும் என இரணியன் குறிப்பிட்டது தவறு என்றும் நம் அருந்தமிழினப் பெருமை மண்ணோடு புதைந்ததை மீட்கவும்தாம் விடுதலை வேண்டும் எனக்கூறியும் பலவாறுகக் கருத்துரையாடல் செய்து கொண்டனர்.

பத்து நிமைய இடைவெளிக்குப் பின்னர் சென்னை மாவட்ட உ.த.மு.க. அமைப்பாளர் திரு. முருகவேள் சென்னை மாவட்டம் வெளியிட்ட சுருக்கக் கொள்கை அறிக்கையைக் காட்டி வேண்டுவோர் அறிக்கையொன்றிற்குப் பத்துக்காசுகள் கொடுத்துப் பெற்றுக் கொள்ளக் கூறியமர்ந்தபின் அடுத்த வகுப்பை நெல்லை (தெற்கு) மாவட்ட அமைப்பாளர் புலவர் சிவசங்கு ஏற்று நடத்தினார்கள். 'சமய இலக்கியங்கள்' எனும் தலைப்பின்கீழ் பேசத் தொடங்கிய புலவர் அவர்கள் தாம் சொல்லிக் கொண்டிருப்பதாகவும் அன்பர்கள் எவருக்கேனும் ஐயம் ஏற்படின கழக முதல்வர் ஐயா அவர்களிடம் கேட்டுக் கொள்ளும்படியும் தம்மால் அவை சரியென வழக்கிட்டுச் சண்டையிட முடியாது எனவும் வேடிக்கையாகத் தொடங்கி, இலக்கியங்களில் சமயத் திணிப்பையெடுத்து விளக்கிக் காட்டினார்கள். அவரின் மென்மையான அழகிய பேச்சோடு அன்றைய நாள் காலைவகுப்பு நிறைவுற்றதாக நன்றியுரை நவின்ற சென்னை மாவட்ட உ.த.மு.க. பொருளர் திரு. துரை-தென்னவன் அறிவித்தார்.

அன்று பகல் உணவு மாநாதோப்பையொட்டிய அநுமன் கோயிலிலேயே அனைவர்க்கும் படைக்கப் பெற்றது பகல் உணவிற்குப்பின் இடைநேரத்தில் ஆணைபெபாதுச் செயலாளர் தென்னவனகோ அவர்களின் 'விடியலை நோக்கி' எனும் வானொலி நாடகம் நாடாப்பதிவான் வழி ஒலிபரப்பப் பெற்றது.

பிற்பகல் 3மணி அளவிற்கு அடுத்த வகுப்பு தொடங்கப்பெற்று திரு. கல்லை-அருட்செல்வன் தலைவராக அமர்த்தப் பெற்றார். பல்லடம் மெஞ்ஞானமூர்த்தி நிகழ்ச்சிக்கு வந்த அனைவரையும் வரவேற்றமர்ந்தபின் தலைவர்தம் முன்னுரையில் இழிவுகள் என்பது எது, இழிவற்றது என்பது எது என விளக்கக் கூறிப், புலவர் தமிழ்மாறன் அவர்களை, தமிழின இழிவுகள் எனுந் தலைப்பின் கீழ் வகுப்பெடுக்கக் கேட்டுக் கொண்டார்.

தமிழன் கடந்த காலங்களில் என்னென்ன வகையிலெல்லாம் இழிவுபடுத்தப் பெற்றான் என விளக்கமாகப் பல வரலாற்றியல் சான்றுகளோடு புலவர் தமிழ்மாறன் விளக்கினார்.

ஆரிய வல்லாளுமை நம் நாட்டில் தலை தூக்கியது முதல் ஏறத்தாழ 1817-ஆம் ஆண்டு வரை ஆரியன் ஒரு தமிழனைக் கொன்றுவிட்டால் அவனை அழைத்து ஒரு மயிரை மட்டும் அறுத்தால்போதும் என்பது நடைமுறையில் இருந்தது. அப்படியானால் எந்த அளவில் தமிழனின் உயிர் ஆரியப்பார்ப்பனர்களின் மயிருக்கு இணையாக இழிவுபடுத்தப் பெற்றது என்பதை ஆழ்ந்து நோக்கக்கூறியும்.

இவ் விழிவு நிலைகளினின்றெல்லாம் தமிழினத்தைக் கட்டிக் காத்து உயிர்ப்பித்தெழ வைக்க மூவாயிரம் ஆண்டுகள் கழித்துப் பெரியாரதாம் தேவைப்பட்டார் என்றும் உணர்ச்சிமழை பொழிந்த வண்ணம் தம் பேச்சில இரண்டு மணிநேர அளவிற்குத் தொடர்ந்து கருத்துகளை அள்ளி வழங்கினார்.

நெல்லை மாவட்ட உ.த.மு.க. வட்டச் செயலர் திரு. தென்மாறன் நன்றிகூற, பயிற்சியாளர்கள் அனைவரும் இருவர் இருவராகக் கொடிபிடித்த நிலையில் கொள்கை முழக்கங்களை, அணையைக் கடந்த வையையின் வல்லொலியைவிட மிகுத்து விண்ணதிர முழங்கியும் 'ஏறுநடை போட்டுநட ...' எனும் பாவலரேறு அவர்களின் பாடலைச் செம்மாந்த நிலையில் பாடிக்கொண்டும் அணைப்பட்டி ஊரை வலம்வந்த கண்கொள்ளாக் காட்சி ஒவ்வோர் உண்மைத் தமிழனுக்கும் உணர்வூட்டுவதாகும்.

(தொடரும்)

— தமிழவேள்

"அண்ணா"

"என்ன தம்பி?"

"தமிழ்நாடு இந்திபரப்புவோர் மாநாடு திருச்சியில் கூடிப் போட்டிருக்கும் தீர்மானங்களைப் படித்தீர்களா?"

"படித்தேன்: அனைத்திந்திய வானொலி நிலையத்திற்கு மீண்டும் ஆகாசவாணி என்று பெயரிட வேண்டும்; தொலைக்காட்சியில் இந்திச்செய்தி ஒளி பரப்பப்பட வேண்டும்; மதுரை, திருச்சி, கோவை, திருநெல்வேலி வானொலி நிலையங்களிலிருந்து இந்திப் பாடல்களை ஒலிபரப்ப ஏற்பாடு செய்ய வேண்டும் என்றெல்லாம் தீர்மானம் போட்டிருக்கிறது."

"தமிழ்நாட்டில் இந்தியை எதிர்ப்பவர்கள் ஆட்சியில் இருக்கும் போதே இப்படித்தீர்மானம் போடப்படுகிறதே அண்ணா!"

"இன்னொரு தீர்மானமும் போட்டிருக்கிறது அம் மாநாடு. குறைந்தது ஐந்து மாணவர்கள் இந்தி கற்க முன்வந்தால்கூட எல்லாப் பள்ளிகளிலும் இந்தி கற்பிக்கத் தமிழ்நாட்டு அரசு ஏற்பாடு செய்ய வேண்டுமாம்!"

"அது என்ன அண்ணா ஐந்துபேர்?"

"நூற்றுக்கு ஐந்துபேர் என்பதாக இருக்கலாம்"!

"தமிழ்நாட்டு மக்கள் தொகையில் நூற்றுக்கு ஐந்துபேர் "பிராமணர்கள்" என்று சொல்லிக் கொள்கிறார்களே அதற்கும் இதற்கும் ஏதாவது தொடர்பு இருக்குமோ?"

"எனக்குத் தெரியாது தம்பி!"

தமிழ்நிலம் நன்கொடைப் பட்டியல்

தமிழ்நிலம் வளர்ச்சியில் ஆர்வமும் அக்கறையும் கொண்ட அன்பர்கள் தாமே முன் வந்து நன்கொடை நல்கியுள்ளனர். அவர்களின கடமையுணர்விற்கு அகங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்வதுடன் இவ்வார்வலர் வரிசையில் அனைவரும் பங்குகொள்ள வேண்டுகிறோம்.

(14-2-84 முதல் 19-6-84 முடிய)

1.	கல்லை. அருட்செல்வன் சுள்ளெறும்பு	50.00
2.	அரசதேவநேயன் உமரிக்காடு	10.00
3.	பு. அ. சுப்பிரமணியன் புதுக்கோட்டை	15.00
4.	சீவாதாசன் பல்லடம்	79.00
5.	புலவர் அறிவுடைநம்பி மூலனூர்	5.00
6.	வே. திருவள்ளுவன இராசசுத்தான்	43.00
7.	உளங்கவரழகன் இராசிபுரம்	5.00
8.	சோதிப்பிரகாசம் பீகார்	25.00
9.	டேனியல் சென்னை-39	4.00
10.	சு. இராதாகிருட்டிணன் ஈரோடு	5.00
11.	சே. இரா. சுப்பிரமணியன் பெருந்துறை	2.00
12.	கல்லை. பெருஞ்சித்திரன் கல்லுப்பட்டி	10.00
13.	புலவர். அறவுடைநம்பி மூலனூர்	5.00
14.	அ. தங்கராசன்-சுசீலா- (தம்மகள் மலாவிழியின் 4-ஆம் ஆண்டு பிறந்தநாள் நினைவாக)	50.00
15.	மு. தமிழ்நெஞ்சன தா. பழூர்	10.00
16.	முத்துடபாண்டியன் ஈப்போ	85.10
17.	செ. வெள்ளைப்பாண்டியன் ,,	85.10
18.	ந. இந்திரன ,,	85.10

உ.த.மு.க.வின் உயர்ந்தகொள்கைகள் :

- தூய்மையான தமிழ்மொழி முன்னேற்றம்
- சாதியற்ற, மதவேறுபாடற்ற சமநிலைக் குமுகாயம்.
- இழிவுகளும் பூசல்களும் ஏமாற்றும் இல்லாத அரசியல்
- தமிழ்த் தேசிய இனத்திற்குப் பொருந்திய பொதுவுடைமைப் பொருளியல்.
- மனம், அறிவு, வாழ்க்கை -இவற்றை வளப்படுத்தவும் நலப்படுத்தவுமான அருவருப்பற்ற கலை வளர்ச்சி.
- பழந்தமிழ் மரபுக்கும் மாந்தவியல் சிறப்புக்கும் ஒத்த பண்பாட்டுப் பரிமாற்றம்.
- எல்லாவற்றிலும் காலத்திற்கேற்ற அறிவியல் அணுகுமுறை.

கழக அருளாளர் : தென்மொழி நா. இளமாறன்
கழக அருட்கொடையாளர்கள்.
தென்மொழி ந.முத்துக்குமரன், பல்லடம் மா. ஆறுமுகம்

ஒவ்வொரு வெள்ளிக்கிழமையன்றும் வெளிவரும். பதிவு எண்: TN MS(C)/657

அனுப்புதல்: பெறுநர் தாள்-அஞ்சல்
தமிழ் நிலம்
5. அருணாசலத் தெரு. திரு/திருவாட்டி
திருவல்லிக்கேணி,
சென்னை — 5

உறுப்பினர்
ஆண்டுக்கட்டணம் உரு. 36-00
அரையாண்டுக் கட்டணம் உரு. 18-00

ஆசிரியரும், வெளியிடுபவரும் பாவலரேறு பெருஞ்சித்திரனார்,
அச்சிடுவோர்: தென்மொழி அச்சகம், 5. அருணாசலத் தெரு, சென்னை-5.